# நம்பிக்கை

# THE HOPE

***

வருடம் : 2 வெளியீடு : 1

இதோ, மேகங்களுடனே வருகிறார் - *வெளி 1:7*

அப்பொழுது மனுஷகுமாரன் மிகுந்த வல்லமை
யோடும் மகிமையோடும் மேகங்களின்மேல்
வருகிறதைக் காண்பார்கள். - *மாற்கு 13:26*

'நீலச் சிகண்டியில் ஏறும் பிரான்
எந்த நேரத்திலும்
கோலக் குறத்தியுடன் வருவான்'

— *அலங்காரம்*

FEBRUARY - MARCH - 1990

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து, அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார் எபேசி 2 : 19, 20.**

நம்பிக்கை வாசகர்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள். இரண்டாவது வருட வெளியீட்டுத் தொடரின் முதல் இதழை வெளிவரச் செய்த தேவனை அனைவரும் நன்றியோடு துதிப்போம். இந்தப் பணிக்கு ஆதரவையும், ஆசீர்வாதத்தையும் தந்து இதனைத் தளராது வளர்த்து வரும் உங்கள் ஒவ்வொருவருக்கும் என் நன்றி.

சமய நூல்களுக்கு உரை செய்தோர் தங்கள் காலத்தில் எந்தக் கொள்கை செல்வாக்குப் பெற்றிருந்ததோ அதற்கேற்ப சில உண்மைகள் புலப்படாதவாறு உரை எழுதிச் சென்றுள்ளார்கள் என்பது ஆராய்ச்சியாளர்கள் கருத்து. திருக்குறளுக்கு உரை செய்தவர்கள் கூட பிறவிச் சுழற்சிக் கொள்கைக்கு ஏற்புடையதாகவே கருத்தைத் தெரிவித்திருக்கின்றனர். மதங்கள் மத்தியில் வேறுபடும் இக்கொள்கைக்கு பேராயர் டாக்டர் இரா அருளப்பா அவர்களின் ஆய்வுக்கட்டுரை ஒரு அருமருந்து என்பதை யாவரும் ஏற்றுக்கொள்வர் என்பது என் தாழ்மையான கருத்து.

நம்பிக்கை முன் அட்டையில் பிரசுரிக்கப்படும் குறிப்புகளைப் பற்றிய சிறு விளக்கங்களை உள்ளேயும் தருமாறு பலர் கேட்கின்றனர். பத்திரிகையைத் தொடர்ச்சியாகப் பெற்றுத் தாமாகவே மேலும் ஆராய்ந்து கொண்டிருப்பவர்களுக்கு இவை தேவையானதொன்று அல்ல என்று எண்ணுகிறேன்.

எனினும் அவை பற்றிய சுருக்கமான விளக்கங்களை, இந்த இதழிலிருந்து தருவது ஏற்றதாக இருக்கும். இறைவனது வருகையைப் பற்றிய விளக்கம் அல்ல, இரு மனையாட்டிகள் யார் என்பது பற்றிய தத்துவம் சுருக்கமாக விளக்கப்படுகிறது.

இப்புதிய வெளியீட்டுத் தொடரிலிருந்து, இப்பணிக்கு உங்கள் ஊக்கமான ஜெபங்களை எதிர்பார்க்கிறேன்.

ஆண்டவர் பணியில் உங்கள் ஊழியன்
V. A. S. தர்மராஜா.

இறைவனை மணவாளனாகவும் அவரது அருள் பெற்ற மக்கட் கூட்டத்தை மனையாட்டியாகவும் கொள்ளும் உருவகங்கள் வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டில் நிறைய உண்டு. சிறப்பாக உன்னதப்பாட்டு என்னும் ஆகமத்தில் இறைவனுக்கும் மனிதனுக்கும் உள்ள உறவுநிலை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவன் தலைவி பாத்திரப் படைப்புகளில் நாடகப் போக்கில் விளக்கிக் காட்டப்பட்டுள்ளது. சபையாகிய மணவாட்டி (ஆத்மீகன்) மணவாளனாகிய கிறிஸ்துவுடன் ஆன்மீக இன்பம் அனுபவிப்பதை உன்னதப் பாட்டு விபரிக்கின்றது.

ஆதியாகமத்திலிருந்து வெளிப்படுத்தின விசேஷம் வரையில், இறைவன் படைப்பு, மனிதனின் வீழ்ச்சி, இறைவன் இரட்சிப்பு, மனிதனின் மீட்சி ஆகியவை இருப்பதைப் போன்றே, சிவஞான போதத்திலும் இவை தெளிவாகக் காட்டப்பட்டுள்ளன என்பதைச் சமய ஒப்பு ஆய்வாளர்கள் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார்கள்.

ஜான் பன்னியன் மனிதனின் மீட்பு வரலாற்றை விளக்குவதற்கு திருப்போர் (Holy war) என்னும் உருவகக் கதையைச் சிருஷ்டித்தது போன்று வைணவ சைவ புராணங்களும் இறைவன் மனுக்குலத்தை (ஆன்மப் பெண்) அலகையிடமிருந்து (பாம்பு+சாத்தான) மீட்க வந்த வரலாற்றை வீரப்போராகச் சிருஷ்டித்தன.

குமரக் கடவுளுக்கு இரு மனைவியராகத் தெய்வயானையும் வள்ளியும் — வெள்ளை கறுப்புப் பெண்டிராகக் — காட்டப்படுவதனை வெறும் புராணக் கண்ணோட்டத்தில் பார்த்துக் கொண்டிராமல், அதன் உள்ளுறையை உணர்தல் அவசியம். இதன் தத்துவார்த்தத்தை உணராத நிலையில் இறைவனுக்கு இரண்டு பெண்டாட்டி என்னும் இழி நிலை உருவாகுமேதவிர உண்மைப் பொருள் விளங்காது. ஞான நூலாராய்ச்சியாளர்கள் இத்தத்துவத்திலுள்ள அவ்விரு பெண்டிரும் சுட்டும் மனுக்குலத்தினர் யார் என்பதைத் தெளிவுபடுத்துகின்றனர்.

சாது செல்லப்பா அவர்கள் கூறும்போது, "விண்ணோரையும், மண்ணோரையும், அவ்விறைவன் தன்னுடன் ஒன்றாக்குவாலை என்று சுருதி விண்ணுக்கு அடையாளமாக ஒரு பெண்ணையும் (தெய்வயானை இந்திரன் மகள்) மண்ணுக்கு அடையாளமாக ஒரு பெண்ணையும் (வள்ளி வேட்டுவன் மகள்) அவர் தன் இருபக்கங்களிலும் கொண்டதாக — (பக்தர்கள்) — எண்ணி மகிழ்ந்தனர்" என விளக்குகிறார் ('ஓம்' — பக்கம் 17).

திருமறையுடன் நாம் இதனைச் சேர்த்துப் பார்க்கும் பொழுது, இறைவனுக்கு இரு மனைவியராக இரு தரப்பினரை மனுக்குலத்திலிருந்து பிரித்து எடுக்கலாம். வெள்ளை நிறம் கொண்ட யூத இனத்தவரையும், கறுப்பு நிறம் கொண்ட புற இனத்தவரையும் இரு மனையாட்டிகளாகக் கொண்ட இறைவன், சிலுவை மரத்தில் தொங்கிய போது, இவ்விரு திறத்தாரது பகைமையைக் கொன்று அதினால் இருதிறத்தாரையும் ஒரே சரீரமாகத் தேவனுக்கு ஒப்புரவாக்கினார்.

பகைமைச் சிலுவையில் கொன்றொழித்து, இறைவனோடு இரு இனத்தவரையும் நல்லுறவு கொள்ளச் செய்யும் நோக்கத்துடன் வந்த பெருமான், தொலைவிலிருந்த யூதரல்லாதவராகிய உங்களுக்கும் அருகிலிருந்த யூதர்களுக்கும் சமாதானம் உண்டாயிற்று என்னும் நற்செய்தியை அறிவித்தார். (பார்க்க எபேசியர் 2:12-20.

இக் கால கட்டத்தில் நடந்து வரும் சைவ, வைணவ கிறிஸ்தவ ஒப்பியல் ஆய்வு, தெய்வக் கொள்கையுடைய மக்களை, மதங்கள் ஒரு நிலைப்பட விடாமல் அலைக்காதபடிக்கு நிச்சயம் நிறுத்திவைக்கும் என்பது எமது நம்பிக்கையாக இருக்கத்தேவன் அருள்புரிவாராக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயேசுகிறிஸ்துவை நாம் ஏன் ஏற்றுக் கொள்ளவேண்டும்?

"இயேசுகிறிஸ்துவைத் தனிப்பட்ட ரீதியாக ஏற்றுக் கொண்டு, அவருக்கு எம்முடைய வாழ்வை அர்ப்பணித்து, அவரைப் பின்பற்றிச் செல்ல வேண்டும்" என்னும் செய்தியை அநேக பிரசங்கங்களில் நாம் கேட்டுள்ளோம். அநேகமாக, கிறிஸ்தவ மார்க்கத்தின் செய்திகள் அனைத்தும் இதற்கே முக்கியத்துவம் கொடுத்துவருகின்றன. உண்மையில், இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்வது ஒரு மனிதனுடைய வாழ்வில் அவன் செய்ய வேண்டிய தலையாய கடமையாயுள்ளது. இந்த முக்கியமான காரியத்தைச் செய்யாமலிருப்பது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும், ஏனென்றால் ஒருமனிதனுடைய வாழ்வின் நித்திய நிலையினை நிர்ணயிக்கும் செயலாகவே இது உள்ளது. எனினும், இயேசு கிறிஸ்து யார்? அவரை நாம் எதற்காக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதை அறியாத நிலையில் அவரை ஏற்றுக்கொள்வதன் அவசியத்தை உணராதவர்களாகவே மக்கள் இருப்பார்கள் என்பதனை மறுப்பதற்கில்லை. எனவே இயேசு கிறிஸ்து யார் என்றும், அவரை நாம ஏன் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்றும் பார்ப்போம்.

## (அ) இயேசுகிறிஸ்துவே மெய்யான தெய்வம்

முதலாவதாக, இயேசுகிறிஸ்து மெய்யான தெய்வமாக இருக்கின்றமையினால் அவரை ஏற்றுக் கொள்ளவேண்டியது அவசியமாகின்றது. இயேசுகிறிஸ்து தேவனாக இராவிட்டால அவரை ஏற்றுக்கொள்வது அவசியமானதாயிராது. ஆனால் அவரோ, மெய்யான தெய்வமாக இருக்கிறார். இதனால்தான், "தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது" (கொலோ 2:9) எனப் பவுல் எழுதியுள்ளார். இதில் வாசமாயிருக்கிறது எனும் பதம் "நிரந்தரக் குடியிருப்பைக்" குறிக்க உபயோகிக்கப்படும் கிரேக்க வார்த்தையின் தமிழாக்கமேயாகும். எனவே தேவத்துவத்தின் முழுமை எப்பொழுதும் அவருக்குள் இருந்தது என்பதே இதனது அர்த்தம்.

இயேசுகிறிஸ்து மனுவுருகொள்வதற்கு முன்பும தேவனாகவே இருந்தார், பவுல் பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தில், "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும்" (பிலி 2:6) என இந்நிலையை வர்ணிக்கின்றார். இதில் "ரூபம்" எனத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க பதம் உருவத்தை அல்ல, மாறாக, கிரேக்க தத்துவங்களிலும் இலக்கியங்களிலும் உபயோகிக்கப்படும் இப்பதம் தன்மையை அல்லது சாரத்தைக் குறிக்கும். எனவே, இயேசுகிறிஸ்து தேவத்தன்மை உடையவராக, தெய்வீக சாரத்தைக் கொண்டவராக இருந்தார் என்பதே இவ்வசனத்தின் சரியான அர்த்தமாகும். அதேபோல, மனுவுருக் கொள்ளும் போதும் இயேசுகிறிஸ்து தேவனாகவே இருந்தார். ஏனெனில் "தேவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாம்சத்தில் வெளிப்பட்டார்'' (1 தீமோ 3:16). ஆதியிலிருந்தே தேவனாக இருந்த தெய்வீக வார்த்தையான இயேசு கிறிஸ்துவே மாமசமாகி இவ்வுலகுக்கு வந்தார் (யோவா 1:1,14). எனினும் அவர் மாம்சமாக மாறிவிடவில்லை. தெய்வீகத்தன்மை மாறாத நிலையில் அவர் மனிதனாக இவ்வுலகுக்கு வந்தார்.

இயேசு கிறிஸ்து மனிதனாக இவ்வுலகில் வாழ்ந்த போதிலும் அவர் தேவனாகவே இருந்தார். இதனால்தான் தேவனுக்கு மட்டுமே உரிய தெய்வீகத்தன்மைகளான சர்வவல்லமை (வெளி 1:8 ; ஏசா 9:6, எபி 1:3 எபே 1:22) சகலவற்றையும் அறியும் அறிவு (யோவா 2:24 - 25; மத் 9:4: யோ 6:64 ; 10:15 ; 18:4 ; கொலோ 2:3) எங்குமிருக்கும் தன்மை (மத்18: 20 ; யோவா 3 ; 13 : எபே 1:23) மாறாத தன்மை (எபி 13 : 8;1 : 10 - 12) பரிசுத்த தன்மை (யோவா 8 : 46, 27 : 54 ; லூக் 23 : 41, 1 பேது 2 : 22; 1 யோ 3;5) நித்திய தன்மை (வெளி 1:8 ; யோவா 1:1; 8 : 58 ; 17 : 5: 17:24) ஆகியவற்றைக் கொண்டிருந்தார்.

இயேசுகிறிஸ்து தெய்வீகத்தன்மைகளை உடையவராக மட்டுமல்ல, தேவனால் மட்டுமே செய்யக்கூடிய செயல்களையும் செய்துள்ளார். குறிப்பாக, அவர் மக்களுடைய பாவங்களை மன்னித்தமையும் (மாற் 2:5 மத் 9:2 ; லூக் 7:48) ஓய்வு நாளில் வேலை செய்தமையும் (யோ 5:12-17) அவர் தேவன் என்பதையே நமக்குக் காட்டுகின்றது. தேவனால் மட்டுமே மக்களுடைய பாவங்களை மன்னிக்க முடியும் (மாற்கு 2 :7; ஏசா 43:25). எனவே இயேசு பாவங்களை மன்னித்தது அவர் தேவன் என்பதையே நமக்கு அறியத்தருகிறது (மாற் 2 : 10-11). அதேபோல இயேசுகிறிஸ்து ஓய்வு நாளில் வேலை செய்தது மட்டுமல்ல, ''தான் ஓய்வு நாளுக்கும் ஆண்டவராய் இருப்பதாகத் தெரிவித்தார். (மாற் 2: 28). அதேபோல, அவர் மக்களுடைய வழிபாட்டை ஏற்றுக்கொண்டதும் (யோவா 9 : 38, 5:23 ; வெளி 5 : 8-14 ; எபி 1 : 6, மத் 2 : 11 ; 15: 25 ; 28 : 17, லூக் 24 : 51-52, மத் 14 : 33) அவர் தேவன் என்பதையே காட்டுகிறது.

இயேசு கிறிஸ்து தேவன் என்பதை வேதாகமம் தெளிவாகக் காட்டுகிறது. ''இவர் என்றென்றைக்கும் ஸ்தோத்தரிக்கப்பட்ட சகலத்திற்கும் மேலான தேவன்'' (ரோமர் 9 ; 5) எனப் பவுல் கூறுகிறார். ''இவரே மெய்யான தேவன்'' (1 யோ 5 : 20) என யோவான் குறிப்பிட்டுள்ளார். பேதுருவும் கூட, ''நம்முடைய தேவனும் இரட்சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்து'' (2 பேது 1:1) என எழுதியுள்ளார்.

— எம். எஸ். வசந்தகுமார்

(அடுத்த இதழில் நிறைவுறும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறளும் பிறவிச் சுழற்சிக் கொள்கையும்...(2)

இதற்கு முன்னர், "இருள் சேர் இருவினை" என்னும் குறள் அடிக்கு நல்வினை, தீவினை என்று பொருள் தந்து இவ்விரண்டுமே இருளாகிய பிறப்புக்குக் காரணமாகும் என்று உரையாளர் பொருள் கூறுவதால், இவ்விருவினை யாவை என்று முதற்கண் அறியவேண்டும்.

தீவினை இருளில் (மறு பிறப்பில்) கொண்டு சேர்த்துவிடும் என்று வைத்துக் கொண்டாலும், நல்வினையும் அங்ஙனம் செய்யுமா என்று கேள்வி எழாமல் போகாது. நற்செயல்கள், அறச் செயல்கள், நல் ஒழுக்கச் செயல்கள் பல எத்தனையோ செய்தல் வேண்டும் என்று மேலும் மேலும் வற்புறுத்திக்கூறும் ஆசிரியர், அந்நற் செயல்கள் எல்லாம் இறுதியில் இருளில் கொண்டு சேர்க்கும் என்னும் கருத்தை எங்ஙனம் கூறியிருக்க முடியும்? "மேலுலகம் இல் எனினும் ஈதலே நன்று" என நன்மை செய்வதன் இன்றியமையாமையைக் கூறும் அவர் இருள் அன்றி ஒளியேயாம் அம்மேலுலகம் சேர்வதற்கு நல்வினை வேண்டா என எங்ஙனம் கூறுவார்? ஆகவே இங்குக் குறிப்பிடப்படும் இருவினை வேறுயிருத்தல் வேண்டும் என்பதும் அவை இரண்டுமே இருளில் சேர்ப்பவை என்பதும் தெளிவாகிறது.

இவ்விருவினை யாவை என்பதை விவிலியம் தெளிவாகக் கூறுகின்றது என்பது எம் துணிபு.

(1) "ஒரே மனிதனால் பாவமும் பாவத்தால் சாவும் இந்த உலகத்தில் நுழைந்தது... இவ்வாறு எல்லாரும் பாவம் செய்தமையால் எல்லா மனிதர்களுள்ளும் சாவு பரவியது. (உரோ 5:12).

(2) எல்லா மனிதர்களும் "ஆதாம் கட்டளையை மீறிச் செய்த பாவத்தைப் போன்ற பாவம் செய்யாவிடினும் அவர்கள் மேலும் சாவு ஆட்சி செலுத்திற்று" (உரோ 5:14).

(3) "ஒரே ஒருவன் செய்த குற்றத்தாலே அந்த ஒருவன் வழியாகச் சாவு ஆட்சி செலுத்தினது" (உரோ 5:17).

(4) "ஒரே ஒருவனின் குற்றம் எல்லா மனிதர்க்கும் தண்டனைத் தீர்ப்பாய் முடிந்தது". (உரோ 5:18).

(5) 'ஒரு மனிதனின் கீழ்ப்படியாமையால் அனைவரும் பாவிகள் ஆயினர்' (உரோ 5:19).

மனித இனத்தின் முதல் மனிதனான ஆதாம் என்பவனால் உலகில் பாவம் ஏற்பட்டது. பாவத்திற்குத் தண்டனையாக உலகில் சாவு என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும் துன்பம் ஏற்பட்டது — ஒருவன் செய்த குற்றத்தால் அவ்வொருவன் வழியாக ஒரு மனிதனின் கீழ்ப்படியாமையால் பாவமும், சாவும் உலகுக்கு வந்தன என்று விவிலியம் கூறுவது தெளிவு. அது மட்டுமல்ல, அந்த ஒரு மனிதன் செய்த குற்றம், ''அவன் செய்த பாவத்தைப் போன்ற பாவம் செய்யாவிடினும் எல்லா மனிதர்களையும் தீண்டியது'' எனவும் காண்கிறோம். (இதைத் தான் 'ஆதிபாவம்' என்கிறோம்). இதன் பொருள் என்ன? இது எங்ஙனம் நிகழலாயிற்று? ஆதிமனிதன் செய்த பாவத்தைப் போன்ற பாவம் செய்யாவிடினும் அவன் வழித் தோன்றிய எல்லா மானிடரையும் தீண்டியதெங்ஙனம்? இங்கு நாம் உணர்ந்து கொள்ள வேண்டியதொரு உண்மை—இது 'இயற்கை நியதிப் படி நிகழ்ந்ததன்று; இறைவனுடைய விசேட திட்டத்தின்படி நிகழ்ந்தது' என்பதாகும்.

## அத்திட்டம் என்ன ?

இறைவன் மனிதனைப் படைத்தபோது அவனைச் சாதாரண இயற்கை நிலையில் விட்டுவிடாமல், தம்மோடு அன்புறவு கொண்டு மிக மிக நெருங்கிய முறையில் 'நண்பென்னும் நாடாச் சிறப்பை' (அதாவது மனிதன் இயற்கையாக நாட இயலாத எதிர்பார்க்க இயலாத இறைவனுடன் நட்புறவை)த் துய்க்கவேண்டுமெனத் திருவுளங் கொண்டான். இச்சிறப்பை ஆதிப்பெற்றோர் மட்டுமன்று, அவர்களிடமிருந்து பிறக்கும் அனைத்து மக்களுமே — மனித இனம் அனைத்துமே — துய்க்க வேண்டுமெனத் திட்டமிட்டான். இத்தகை தெய்வீக நட்பையும் உறவையும் அருள் எனப்படும் 'செல்வத்துட் செல்வத்தையும், மேலுலகத்தில் இறைவன் பேரின்பத்தை அடைவிக்கக்கூடிய ஆற்றலாகிய சக்தியையும் மனிதன் பிறப்பிலேயே பெறவேண்டுமாறு அருள் கூர்ந்து திட்டமிட்டான். அதே சமயத்தில் அவர்களைச் சிறியதொரு பரிசோதனைக்கு உட்படுத்தினுன். இறைநட்பு, அருட்சக்தி என்னும் செல்வத்துட் செல்வமாதலால் அதை இறைவன் மனிதன் மீது திணிக்க முடியாது. இறைவனுடைய வரங்களுள் மிகமிக மேலான வரமான இது விரும்பி ஏற்றுக் கொள்ளப்படவேண்டியது. வரம், நன்கொடை என்பதன் இலக்கணமே அவ்வாறு. அதாவது தருபவன் விரும்பித்தரவேண்டும், பெறுபவன் விரும்பி ஏற்கவேண்டும். இங்ஙனம் விரும்பி ஏற்றுக்கொள்வதற்கு ஒரு சிறு சந்தர்ப்பமாக அமைந்தது அப்பரிசோதனை. இறைவன் தந்ததொரு சிறுகட்டளை மிகச்சிறிய பரிசோதனை. (எத்தனையோ மரங்களிருக்க ஒன்றன் பழத்தை மட்டும் தொடலாகாது என்பதன் உட்கருத்து இதுவே. எபிரேய மொழியில் இது போன்ற சொல் சித்திரங்கள் பல உண்டு). இக்கட்டளையை மீறினுல் விளையும் கேட்டையும் இறைவன் எச்சரித்திருந்தான். ''மீறினுல், யாம் தந்த அருட்செல்வத்தை நீ மட்டுமன்று, உன் சந்ததி அனைத்தும் இழந்து, அருளற்ற நிலையில், இறைநட்பு இல்லாத நிலையில் பிறப்பர்'' என்பது அவ்வெச்சரிக்கை! முதல் மனிதன் மீறினுன் 'தீவினை என்னும் செருக்கினுல்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் தீவினை பாவம் உலகில் நுழைந்தது. ''அருள் இழந்தநிலை ஆதி மனிதனுக்கு மட்டுமன்று, அவன் சந்ததியனைத்தையும் மேற்கூறிய இறைவன் திட்டப்படி தீண்டலாயிற்று'' இதுவே 'ஆதிப்பாவம்' அல்லது 'ஆதிவினை' எனப்படுவது.

ஆதிமனிதனுகிய ஆதாமைப் பொறுத்தமட்டில் இது அவன் அறிந்து விழைந்து செய்த பாவம். அவனது சந்ததியைப் பொறுத்த மட்டில், இறை நட்பும் அருளும் இழந்த ''நிலை''. ஆதி மனிதனுக்கு ஏற்பட்ட அருள் இழந்த நிலையால் அவனுக்கும் அவனது சந்ததிக்கும் ஒருவித மனத்தடுமாற்றம், மயக்கம், மருள் நிலை ஏற்படலாயிற்று. இதனுல் தீவினைகள் பெருகலாயின. இதுவே அனைத்து மக்களுக்கும் ஏற்பட்ட ஆன்மீக 'இருள்' நிலை. ஆதிமனிதன் செய்த தீவினையும் அவன் சந்ததியார் செய்யும் தீவினைகளுமே 'இருள் சேர் இருவினை' என்பது இதனின்று புலப்படுகிறது.

இவ்விளக்கத்தைப் பின்னணியாகக் கொண்டு 'பிறவி', 'பிறப்பு' 'எழுமை' 'எழு பிறப்பு' முதலிய திருக்குறள் கூறும் பாக்களுக்கு உண்மை விளக்கம் காண்போம்:

1. பிறவிப் பெருங்கடல் - இது முதல் அதிகாரத்தில் இருள்சேர் இருவினையுள் ''ஆதிவினை''க்கு விளக்கம் கூறுமுகத்தான் உள்ளது எம் துணிபு.

ஆதிப்பாவத்தால் நிகழ்ந்த இறை அருள் இழந்த நிலை முதல் மனிதனை மட்டுமன்று, அவன் வாயிலாய்ப் பிறக்கும் (பெருங்கடல் போல்) எண்ணற்ற தலைமுறைகளைப் பாதித்து வருகின்றது என்பது கிறிஸ்தவக் கருத்து. விவிலியம் கூறுவது போல், ஆதாம் இறைவன் தந்த ''கட்டளையை மீறிச் செய்த பாவத்தைப் போன்ற பாவம் செய்யாவிடினும்'' மானிடர் அனைவர்மீதும் பாவநிலையும் அதன் தண்டனையாக வந்த சாவும் அதாவது சாக வேண்டிய நிலையும் ஏற்பட்டது (உரோ 5:14 காண்க). பாவம், பாவநிலை என்னும் சொற்களால் இறைவனது நட்பும் அருளும் நீங்கிய நிலை என்றுணர்க. அருள்நிலை என்பது இறைவனுடன் நட்புறவு உள்ளநிலை—அதாவது பாவமில்லாத நிலை.

இந்நிலையில் எண்ணமுடியாத மனித தலைமுறைகள் (பிறப்புகள்) தோன்றியதாலும், இன்னும் அதே நிலையில் தலைமுறைகள் தோன்றிக் கொண்டேயிருப்பதாலும், இத்தலைமுறைகளைக் கணக்கிட முடியாததாலும் 'பெருங்கடல்' என உவமையாகக் கூறப்பட்டது.

மானிடர் செய்த, செய்யும் தீவினைகளுக்கெல்லாம் இந்த ஆதிவினை ஒருவித வேர் போல் இருப்பதால் இது 'உலகின் பாவம்' எனப்படுவதுண்டு. கிறிஸ்துவை மக்களுக்கு அறிவிக்க வந்த அவரது முன்னேடி 'இதோ உலகின் பாவத்தைப் போக்க வந்த செம்மறி' எனக் குறிப்பிட்டார். (செம்மறி என்பது பலியாகின்றவர் என்பதைக் குறிப்பிடும்). கிறிஸ்து உலகுக்கு வந்தது பொதுவாக உலகின் பாவங்களையெல்லாம் போக்கவே. எனினும், ஆதிப் பாவத்தைப் போக்குவதே அவரது முக்கிய நோக்கம் என்று வேதசாஸ்திரி புனித தோமாஸ் அக்வினு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுகிறார். வேரிலுள்ள நஞ்சைப் போக்கினால் செடியும் கனியும் நன்றாவது போல என உவமையாகக் கொள்ளலாம்.

இனி மற்றக் குறள்களை ஆய்வோமா?

(தொடரும்)

— பேராயர் டாக்டர் இரா. அருளப்பா

நன்றி: 'திராவிட சமயம்'.

---

# சைவ சித்தாந்தத்தில் அவதாரக் கோட்பாடு உண்டா? ...(2)

## சைவக் கொண்முடிபு காட்டும் அவதாரம்.

சைவ சித்தாந்த சாத்திரங்களின் எண்ணிக்கை பதினான்கு. இவை மெய்கண்ட நூல்கள் எனவும் வழங்கப் பெறும். இவற்றை எழுதிய ஆசிரியர் அறுவர். மெய்கண்ட நூல்களை எழுதிய ஆசிரியர்களுக்குச் சந்தான குரவர்கள் எனப்பெயர் சூட்டியுள்ளார்கள். இவற்றில் முதலிரு சாத்திரங்களான 'திருவுந்தியா'ரை இயற்றிய திருவியலூர் உய்ய வந்த தேவநாயனார் பெயரும் 'திருக்களிற்றுப் படியா'ரை இயற்றிய திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார் பெயரும் நீக்கப்பட்டுவிட்டன. இவ்வாறு நீக்கியமை சூழ்ச்சியின் பாற்பட்டதாகும். நுணுகி ஆயும் அறிஞர்க்கு இதன் காரணம் புலனாகாமற் போகாது.

'திருவுந்தியா'ரின் முதற் செய்யுள் கடவுள் திரு அவதாரம் எடுத்ததைச் செப்புகின்றது.

''அகளமாய் யாரும் அறிவரி தப்பொருள்
சகளமாய் வந்ததென் றுந்தீபற
தானாகத் தந்ததென் றுந்தீபற'' — (திருவுந்தியார் 1)

ஒருவராலும் அறியமுடியாத நிலையிலுள்ள பரம்பொருள் (அகளம்), வடிவத்தைத் தாங்கி (சகளம்) வந்தது; அது தன்னையே நமக்காகத் தந்தது என்பது செய்யுளின் விளக்கம். இது கிறிஸ்தவக் கருத்தோடு ஒப்பு நோக்கத் தக்கது. ''வார்த்தை மாமிசமானது'' (யோவான் 1:14) என்று 'அறியப்படாத கடவுள்' அறியப்பட்ட இறைவனாக விளங்கியமையை விவிலியம் கூறுகிறது. ''ஆதிமுதல் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப் பார்த்ததும் எங்கள் கைகளினாலே தொட்டதுமாயிருக்கிற ஜீவ வார்த்தையைக் குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம்'' (1 யோவா 1:1). இறைவாக்கினராக விளங்கிய இறைவன் தன்னையே மக்களுக்காக வலிந்து ஈந்தான் என்பனப் போன்ற விவிலியக் கருத்துகள் திருவுந்தியாரின் செய்யுளுக்கு மேலும் விளக்கந்தருவனவாய் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மாக்களின் பாசப் பிணியை அறுத்து மெய்யுணர்வளித்தற் பொருட்டு ஆசிரியத் திருமேனி தாங்கி வெளிப்பட்டு அருள் புரிபவன் இறைவன் என்பதை,

"அறியாமை யுண்ணின் றளித்தே காணுங்
குறியாகி நீங்காத கோ" — (திருவருட்பயன் 41)

என்ற பா உணர்த்துகிறது. "காணுங் குறியாகி" என்பது நோக்கற் பாலது. "கோ" என்ற அரசனைக் குறிக்கும் சொல்லும் கடவுளுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

"அருளா வகையா லருள் புரியவந்த
பொருளா ரறிவார் புவி" (திருவருட்பயன் 43)

என்பதினுக்கு உரை கூறும் நிரம்ப அழகிய தேசிகர் "படைப்பு நிலை ஈறு மறைப்பு என்னும் நான்கினையும் தோன்றாது செய்தவாறு போல, அருளென்னுந் தொழிலினையும் தான் பண்ணாதது போலப் பண்ணும் படி, மானுடவடிவென்னும் அங்கியால் மறைத்துக் கொண்டு வந்த உண்மைப் பொருளே இக்குருவடிவு என்பதனை அறியமாட்டாது உலகு" (அ) என எழுதுகிறார். இதன் மூலம், மானுட வடிவங் கொண்டவன் கடவுள்; அதுவே அருள் வடிவம் என்பது தெளிவாகிறது.

"மூவகை ஆருயிர் வர்க்கம் மலத்தார் கன்ம
மூலமத் தார்மூன்று முடையாரன்றே
தீவகமாம் எனவுருவாய் வந்து நாதன்
திருநோக்கால் பரிசத்தால் திகழும் வாக்கால்
பாவனையால் மிகு நூலால் யோகப் பண்பால்
பரவி வரும் அவுத்திரியாற் பாச நாசம்
மேவ அருளுதவும் அவுத்திரியிரண்டு திறனும்
வியன் கிரியை ஞானமென விளம்புமாறே. (சிவப்பிரகாசம் 8)

என்ற சிவப்பிரகாசப் பாடலுக்கு உரை கூறும் மதுரைச் சிவப்பிர காசர், "சிவன் இந்த மூவகை ஆன்மாக்களுக்கும் உண்டான மலங்களைப் பாகம் வருத்துமிடத்து யாதாமொரு பறவைகளை மிருகங்களைப் பிடிக்க வேண்டினவர்கள் அதற்கேற்ற பார்வையைக் காட்டிப் பிடித்த தாற் போல ஒரு மலத்தையுடைய விஞ்ஞானகலருக்கும், இரண்டு மலத்தையுடைய பிரளயாகலருக்கும், மூன்று மலத்தையுடைய சகலருக்கும் அவரவர் நிலைக்குத் தக்கதாகத் திருமேனி கொண்டு இரட்சிக்குமிடத்து விஞ்ஞான கலரும் பிரளயாகலரும் இப்பூதேகச் சம்பந்தமற நிற்கையில்

(அ) 'திருவருட்பயன்' நிரம்ப அழகிய தேசிகர் உரையும் வெள்ளை வாரணனார் எழுதிய உரைவிளக்கமும், சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாசத்தின் மணி விழா நினைவு மலர் இரண்டாம் பதிப்பு 1976, பக் 89.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(மெய்கண்ட சாத்திரம் பதின்ஞன்கு மூலமும் உரையும். இரண்டாம் பகுதி, சிவப்பிரகாசம் கழகம், 1969 பக்கம் 28-29)

அவர்களைப் போலச் ''சாதாரணமாகிய மானுடச் சட்டை சாத்தி வந்து இரட்சிக்கும்'' என மானுட அவதாரத்தைக் கூறுகிறுர்

''திருவருட்பயன்'' ஆசிரியரும்,

''பார்வையென மாக்களைப் பற்றிப் பிடித்தற்காம்
போர்வை எனக் காணுர் புவி'' என்று குறிக்கிறுர், (திருவருட்பயன்). மாந்தனைத் தன்பால் இழுத்துக் கொள்ளவேண்டும் என்ற அன்பினுல் இறைவன் அருள் சுரந்து குருமேனியாகிய அருள்வடிவு கொள்கிறுன். அஃது அவதாரத்தைச் சுட்டாமல் வேறெதையும் சுட்டவில்லை.

உமாபதி சிவாச்சாரியார் ''போற்றிப் பஃறெடை' என்ற சாத்திரத்தில்

''இறவாத இன்பத் தெமை இருத்த வேண்டிப்
பிறவா முதல்வன் பிறந்து - நறவாருந்
தாருலா வும்புயத்துச் சம்பந்த நாதனென்று
பேரிலா நாதன் ஓர் பேர் புனைந்து - பாரோர்தம்
உண்டி உறக்கம் பயம் இன்பம் ஒத்தொழுகிக்
கொண்டு மகிழ்ந்த குணம் போற்றி'' (போற்றிப் பஃறெடை)

என மொழிவதில் உலக முதல்வன் இவ்வுலகில் பிறந்தமையைப் ''பிறவா முதல்வன் பிறந்து' என்றும் 'பூமியிலுள்ளவர்களைப் போல உண்பதும் உறங்குவதும் அருள்வதும் விடயபோக இன்பமுறுவதும் ஒத்தொழுகிக் கொண்டெழுந்தருளி மகிழ்ந்திருந்த குண'முடையவன் என மிகத் தெளிவாகவே அவதாரச் சிறப்பினைக் கூறுகின்றுர். அருள் வடிவு மட்டுமே இறைவன் கொண்டான் என்றுல், இவ்வுலகோர் போன்று மாந்தவுடல் எடுத்தான் எனச் சாத்திரங்கள் கூறவேண்டுவதென்னே?

கடவுள் தனது பிறப்பாகிய 'ஜனனத்'தாலே மாந்தரின் மும்மலங்களைக் கழுவிட அறவுரை கூறும் ஆசிரியனுகத் தோன்றினுன் என்பதற்குச் சிவஞானசித்தியார் சுபக்கம் விளங்கந் தருகிறது.

''சித்தாந்தத்தே சிவன் தன் திருக்கடைக்கண் சேர்த்திச்
செனனம் ஒன்றிலே சீவன் முத்தராக
வைத்தாண்டு மலங்கழுவி ஞான வாரி
மடுத்தானந்தம் பொழிந்து......(சிவஞான சித்தியார்)

என்ற பாடல் 'செனனம்' என்பது அவதாரம் என்ற பொருளில் ஆளப்படுதல் காண்க.

(அடுத்த இதழில் நிறைவுறும்)

யா. தா. பாசுகரதாசு எம். ஏ; பி. எட்.

— நன்றி. 'திராவிடசமயம்' May 1984.

---

இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள். ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப்பாடுபட்டு, நீங்கள் தம்முடைய 'அடிச்சுவடுகளைத்' தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின் வைத்துப் போனுர். 1 பேதுரு 2:21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியம் - திருக்குறள் - சைவசித்தாந்தம் ஒப்பாய்வு - 2

சென்ற இதழின் தொடர்ச்சி

## 3 குருவாதல்

(முந்திய இதழில் வந்தது: இறைவனே குருவாக வந்த போதிலும் அவன் அருவத்தை நீத்து, ஐம்புல உருவத்தை ஏற்று மனிதனாக விளங்கிய காரணத்தால், இறைமகன் எனவும் குமரக்கடவுள் எனவும் இறைவனின் பிள்ளை எனவும் குறிக்கப்படுகின்றான்.

இறை விருப்பத்தை ஐம்புல குருவாக வந்த இறைமகன் தவறாமல் செயல்படுத்துகின்ற காரணத்தால், உடன்பாட்டு ஒலியாகிய ஆம், ஓம், ஆமென் என்னும் மூல ஒலி எழுவதற்கு அக்குருவே காரணமாகின்றார். அவரிடமிருந்தே ஒலி எழுகிறது).

அவ்வொலி மற்ற எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் அறவாழி அந்தணனாக, என்பும் பிறர்க்கீயும் அன்புடையராகக் குருவாய் நின்று அறத்தை உலகத்திற்கு வெளிப்படுத்துவதாக விளங்குகிறது.

''அந்தண ரென்போர் அறவோர் மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்''

என்று நீத்தார் பெருமையின் இறுதியில் கூறுவதன் வாயிலாகப் பொய்தீர் ஒழுக்க நெறியில் ஒழுகிக் காட்டிய அந்தணனாகிய நீத்தார் காட்டியதே அறம் என்றாகிறது.

''அறம் என்ற சொல், முதன் முதலில் எப்பொருளை உணர்த்த உருவாகியது என்று சுட்டுவது கடினமானாலும், சொல்லமைப்பு ஆய்வியல் அடிப்படையில் நோக்கும் போது, 'அறு' என்ற வினைச் சொல் அடியாகத்தான் பிறந்தது'' (அ).

''பொய் தீரொழுக்க நெறி என்னுமிடங்களில் குறிக்கப் பெறும் ஆறு, நெறி, என்பனவெல்லாம் இவ்வறவாறு அறநெறி என்பனவே யாகல வேண்டும்'' (ஆ).

ஆகவே, ஐந்தவித்தான் காட்டிய, மனமாசை அறுக்கும் பொய் தீர் ஒழுக்க நெறியாகிய சமயம், அறத்தைக் காட்டும் சமயமே ஆகும் என்பது வள்ளுவர் கொள்கை என்றாகிறது. இயேசுகிறிஸ்துவைப் பற்றியும் விவிலியம் கீழ்க்காணுமாறு கூறுகின்றது.

---

(அ) ஆத, முதம்தையா, அறம், இந்திய பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம், 12வது கருத்தரங்கு ஆய்வுக்கோவை, தொகுதி-3, ப. 249.

(ஆ) டாக்டர் மு. கோவிந்தசாமி, திருக்குறள் பொருள் அகராதி' அண்ணாமலைப் பல்கலைக் கழகம் 1972, பக் 28.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இவர் அறத்தை அறிவிப்பார்; சச்சரவு செய்யமாட்டார்; இவர் குரல் தெருவில் கேட்காது; அறம் வெற்றி பெறச் செய்யும்வரை இவர் நெரிந்த நாணலை முறியார்; புகையும் திரியை அணையார்''(இ).

அறவாழி அந்தணனாகிய கடவுள் மற்ற எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு, ஒழுக்கத்து நீத்தாராகி, ஒழுகிக் காட்டிய அறமே வள்ளுவரின் பொய்தீர் ஒழுக்க நெறியாகும். அந்த அறத்தை விரித்துரைப்பதே வள்ளுவர் நூல் செய்த நோக்கம்.

மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு, பொறிவாயில் ஐந்தவித்தானும் அறவாழி அந்தணன், ஒழுகிக் காட்டிய பொய்தீர் ஒழுக்க நெறியாகிய அறத்தில் நிலை நிற்போரின் தன்மையை, வள்ளுவர் கீழ்க் கண்டவாறெல்லாம் விளக்கிக் காட்டுகின்றார்.

| | |
|---|---|
| என்பும் பிறர்க்குரியதாகும் அன்புடைத்தாதல் | — 72. |
| ஒப்புரவினால் வரும் கேட்டைத் தன்னை விற்றும் கொளல் | — 220. |
| நத்தம் போல் கேடும் உளதாகும் சாக்காடும் அடைதல் | — 235. |
| தன்னுயிர் தானறப் பெறுதல் | — 268. |
| பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைதல் | — 580. |
| தோல்வி துலையல்லார் கண்ணும் கொளல் | — 986. |
| இன்னா செய்தார்க்கும் இனியவே செய்தல் | — 987. |
| துன்பஞ் சுடச்சுட நோற்றல் | — 267. |
| கறுத்து இன்னா செய்தவக் கண்ணும் மறுத்து இன்னா செய்யாதிருத்தல் | — 312. |
| ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணும் கண்ணோடிப் பொறுத்தாற்றல் | — 579. |
| தீய செறுவார்க்கும் செய்யாது விடல் | — 203. |
| திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து அறனல்ல செய்யாதிருத்தல் | — 157. |
| இறந்தார் வாய் இன்னாச்சொல் நோற்றல் | — 159. |
| இன்னா செய்தார்க்கும் அவர் நாண நன்னயம் செய்தல் | — 314. |
| மறந்தும் பிறன் கேடு சூழாதிருத்தல் | — 204. |
| பெருக்கத்தும் பணிதல் | — 963. |
| அற்றம் மறைக்கும் பெருமையுடைத்தாதல் | — 980. |
| மருந்தாகித் தப்பா மரமாதல் | — 217. |

இவ்வாறு குருவாக வந்து உலகில் தோன்றி, மற்ற உயிர்க்கும் செந்தண்மை பூண்டு, ஐந்தவித்தலாகிய தவத்தில் ஒழுகியதுடன் 'பணியுமாம் என்றும் பெருமை' என்னும் குறளுக்கேற்ப, நீத்தார் பெருமையின் பணிவுத் தன்மையை வெளிக்காட்டியுள்ளார்.

---

(இ) மத் 12:18-20.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமரக் கடவுளாகிய அவர் தந்தையின் விருப்பத்திற்குப் பணிந்து, எல்லாத் தீமைகளையும் தாம் ஒருவரே ஏற்றுக் கொண்டதுடன், தம் மாணவர்களுடைய கால்களையும் தாமே நீர் கொண்டு கழுவும் அளவுக்குப் பணிவை இவ்வுலகிற்குக் கற்பித்தார் என்று, அவருடைய பெருமையை மறைமொழியாகிய வேதாகமம் கூறுகின்றது. அதிலும் சிறப்பாகத் தம்மிடத்திலே மாணவனாயிருந்துகொண்டே தம்மைக் காட்டிக் கொடுக்கப்போகும் யூதாசை அறிந்திருந்தும், அவனுடைய காலையும் கழுவும் அளவுக்குச் சென்றுள்ளமை, அவருடைய பேரன்பையும் பணிவையும் விளக்கும் பெருமையன்றோ? (யோவான் **13:2-26**). இப்பெருமைகளையெல்லாம் விளக்குவதே 'பனுவல் துணிவு' மறைமொழி காட்டும் தன்மை எனலாம்.

இத்தகைய குணக்குன்றாகிய அவனிடத்திலும் வெகுளியுண்டோ? அதை எண்ணிப் பார்த்த வள்ளுவர் 'வெகுளி கணமேயும் காத்தல் அரிது' எனக் கூறுகின்றார். யாருக்கு அரிது? வெகுளி ஏன்? குணமென்னும் குன்றேறி நின்றார்க்கும் வெகுளி உண்டோ! என்பன எண்ணிப் பார்க்கத்தக்கன.

''இறைவனடி சேராதார் பிறவிப் பெருங்கடல் நீந்தார், 'எண்குணத்தான் தாளை வணங்காத் தலை குணமிலவே', 'தாள் சேர்ந்தார்க்கு அல்லால் நீந்தல் அரிது', தாள் சேர்ந்தார்க்கல்லால் மனக்கவலை மாற்றலரிது', என இறைவனைப் பற்றிக் கொள்ளாதவர்களின் துன்பநிலையை விளக்கமாகக் கூறுகின்றார் வள்ளுவர். (குறள் **10,9,8,7**). அப்படியே ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறி நிற்காதவர் நீடு வாழார்; அதாவது அழிவர். இறைவன் பொருள்சேர் புகழ்புரியார் மாட்டு இருள் சேர் இருவினையும்சேரும்; வேண்டுதல் வேண்டாமையிலானடி சேராதார்க்கு யாண்டும இடும்பையுண்டு; மலர்மிசையேகினான் மாணடிசேராதார் நிலமிசை நீடுவாழார்; அதாவது அழிவர்; என்னும் கருத்துக்களையும் பெறும்படியாக வள்ளுவர் வைத்திருப்பது ஆழ்ந்து நோக்கத்தக்கது.

நீடு வாழ்வளிக்கும் பொய்தீர் ஒழுக்க நெறியை மக்களுக்கு அளிக்கவே தனக்குவமையில்லாக் கடவுள் தனக்குரிய எல்லாவற்றையும் நீத்து மனிதனாகி, அவனுடைய அற்றத்தைத் தான் ஏற்றுப் பொறிவாயில் ஐந்தவித்து, மனிதனுக்கு எல்லாக் குணச் சிறப்புகளையும் வெளிப்படுத்தியும், மனிதன் அதை ஏறெடுத்தும் பாராது தட்டிக் கழித்திருப்பானானால், அவன் முடிவு என்னாகும்? அம் முடிவையே கடவுள் வாழ்த்துச் செய்யுளில் மேற் கண்டவாறு வரிசையாக அமைத்துள்ளார்.

'வேண்டுதல் வேண்டாமையிலான்,' என இறைவன் கூறப்பெற்றிருப்பது ஆழ்ந்து நோக்கத்தக்கது. விருப்பு வெறுப்பற்றவன் என்னும் நிலையே அது. அதுவே நீதிபதியின் நிலை. இறைவனைப் பெரும் நீதிபதியாகக் காட்டுகின்றார் எனலாம். இருள்சேர் இருவினையிலிருந்து விடுதலையை ஏற்படுத்தி வைத்திருந்தும், அதை ஏற்றுக் கொள்ள மறுக்கின்றவர்கள் நீதியின்படி தண்டனையைப் பெறுவது இயல்புதானே? தண்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டனை கொடுப்பதும் முறைதானே? அந்நேரத்தில் அந்நீதிபதியின் முகத்தில் கோபக்குறி காணுவதும் இயல்புதானே? ஆகவே, 'வருங் கோபத்திற்குத் தப்பிக்கொள்ளுங்கள்' என்று மக்களுக்கு அமைதியாக அறிவுறுத்துவதுபோன்று, திருவள்ளுவர் தம் திருக்குறளை அமைத்துள்ளார் எனலாம்.

''குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது'' (குறள் 29).

இக்கருத்தினையே திருமுழுக்கு முனிவராகிய அருளப்பர் என்பார்,

''வரப்போகும் சினத்துக்குத் தப்பித்துக் கொள்ள உங்களுக்குச் சொல்லிக் கொடுத்தவன் யார்? எனவே, மனந்திரும்பியவர்க்கேற்ற செயலைச் செய்து காட்டுங்கள்...... ஏற்கனவே அடிமரத்தில் கோடாரி வைத்தாயிற்று. நற்கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு தீயில் போடப்படும்'' (மத் 3:7-10) எனக் கூறுகின்றார்.

மேலும், ஐந்தவித்தானாகிய கிறிஸ்து, நியாயாதிபதியாக வெளிப்படுங்கால், நடைபெறும் நிகழ்ச்சியை விவரிக்கும் வேதாகமப் பகுதி கீழ்க்கண்டவாறும் அமைந்துள்ளது.

''அந்த மலைகளையும் பாறைகளையும் நோக்கி, அவர்கள் ''எங்கள் மேல் விழுந்து அரியணைமேல் வீற்றிருப்பவரின் முகத்தினின்றும் செம்மறி (ஐந்தவித்தான்)யின் சினத்தினின்றும் எங்களை மறைத்துக் கொள்ளுங்கள். ஏனெனில் அவருடைய சினம் வெளிப்படும் பெருநாள் வந்து விட்டது. அதை எரிர்த்து நிற்பவன் யார்' என்று சொன்னார்கள்''. (திருவெளிப்பாடு 6:16-17).

''வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பை இல', 'வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர் வைத்தூறு போலக்கெடும்' என்பன குணமென்னும் குன்றேறி நின்றாராக விளங்கும் உருவாகிய நீத்தாரின் வெகுளியில் இருந்து, தன்னைக் காத்துக் கொள்வதற்கு வாழும்பொழுதே செய்யவேண்டியதைக் கூறும் அறிவுரையாக விளங்குகின்றன.

ஆதாரம் — **விவிலியம் - திருக்குறள் - சைவசித்தாந்தம் ஒப்பாய்வு**

---


# தேவ ஊழியர்களுக்கோர் நற்செய்தி!

கிறிஸ்தவ துண்டுப்பிரசுரம் தேவைப்படுவோர்
தொடர்பு கொள்க :

**M. A. RAJ DEVAIRA**
No 57, Lower St. Andrews Place
Colombo - 15.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவலிங்கம் முதல் சித்தாந்தம் வரை...(3)

## சிவலிங்கம்

சிவம் + லிங்கம் = சிவலிங்கம். சிவம் என்பது செம் என்னும் அடிப்பிறந்து, ஒரு வகையிலும் திரியாது என்றும் ஒரே தன்மைத் தாய் நிற்கும் செம்பொருளாகிய கடவுளைக் குறிக்கும் தென் சொல்.

"பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும் செம்பொருள் காண்பது அறிவு என்று திருவள்ளுவர் கூறுதல் காண்க" என தேவநேயப் பாவாணர் விளக்கம் கூறுகின்றார்.

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவதாரும் அறிந்திலர்
அன்பே சிவமாவதாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப்பரே" எனத் திருமூலர் கூறுகின்றார். என்றும் ஒரே தன்மைத்தாய், எவ்வகையிலும் திரியாது நிற்கும் அன்புமயமான செம்பொருளை சிவம் என்று சொல்லால் விளக்க முயன்றவர்கள் தமிழர் எனலாம்.

சிவம், சைவம் முதலிய சொற்கள் சங்க இலக்கியங்களில் காணப் படவில்லை. சங்க காலத்திற்குப் பின்னர் எழுந்த சமய நெறிக் காலத்தில்தான் இச்சொற்கள் ஆளப்படுகின்றன. சொற்கள் பிற்பட்ட காலங்களில் உருவான போதிலும் சொல் குறிக்கும் பொருள் முன்னரே இருந்து வந்தது.

'சிவம் என்ற சொல், இன்று சிவபெருமான், சைவ சமயத்திற்கு மூலமான சிவபரம்பொருள் என்ற கருத்தில் வழங்குகிறது. ஆனால் இதன் பொதுவான கருத்து செம்மை அளிப்பது, மங்களத்தைத் தருவது என்பதாகும். இப்பொருளில் இச்சொல் வேதத்தில் காணப்படுகிறது என்பர். இக்கருத்து ஒருவகையில் சமயங்கடந்த ஓர் ஆனந்த நிலையைச் சுட்டியது போலும். மேலான எதையும் சிவம் என்றே சொல்லி வந்தார்கள். 15ஆவது நூற்றாண்டு வரையில் கூட வீட்டுலகு என்று குறிப்பிடும் போது சைவ நூல்கள் சிவகதி என்றே சொல்லி வரக் காணலாம்" என மு. அருணாசலம் குறிப்பிடுகின்றார். (மு. அருணாசலம் - சைவசமயம் - பாரி நிலையம். 1969 பக். 10)

அன்புச் சமயமாகிய சைவம் உருவாவதற்கு முன்னரும், அச்சமயம் குறிப்பிடும் சிவன் என்ற பெயர் உருவாவதற்கு முன்னரும், செம்பொருளாகிய இறைவன் உள்ளார். என்றுமுள்ள இறைவனைச் சிவன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என, சங்ககாலத்திற்குப் பிற்பட்ட தமிழர் பெயர் குறித்தனர். தேவார காலத்திற்கு முற்பட்டது திருவாசகம், என்ற மறைமலையடிகளின் ஆய்வு முடிபு ஏற்றுக் கொள்ளப்படுமானால், சிவன் என்ற சொல்லை உருவாக்கித் தமிழகத்தில் பரப்பிய பெருமை மாணிக்க வாசகரையே சாரும்.

பெயரில்லாத இறைவனுக்குப் பெயர் கொடுக்க நேர்ந்ததைக் குறித்து, அவர்

''ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமில்லார்க்கு ஆயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ'' என

விளக்கம் கொடுக்கின்றார்.

இறைவனுக்குப் பெயரும் உருவமும் கிடையாது. பெயரும் உருவமும் இல்லாத பொருளைப் புரிந்து கொள்ளல் இயலாது. பெயரும் உருவமும் இல்லாத பொருள் இல் பொருளாக எண்ணப்படுவதும் இயல்பே. ஆகையால்தான் இறைவன் இல்லை என்பாரும் இருக்கின்றனர்.

''அவன் அருள் இன்றி அவனைப் புரிந்து கொள்ளல் இயலாது'' என்பது, அவனருளால் அவனைப் புரிந்து கொண்டவர்களின் தெளிவு.

அவனருளால் அவனைப் புரிந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்றவர்களால் தாங்கள் உணர்ந்த அவ்வுணர்ச்சியை அடக்கிக்கொள்ள இயலுவதில்லை. மற்றவர்களுக்கும் அதை விளக்கிக்காட்ட முயலுகின்றனர். அம்முயற்சிக்கு அவர்கள் பேசும் மொழி பயன்படுகின்றது. தாய்மொழியில் தாங்கள் உணர்ந்த இறைவனின் பண்பை விளக்கிக் காட்ட முற்படுங்கால் பண்பை விளக்கும் பெயர்கள் பிறக்கின்றன. விளக்கிக் கூறும் முறையில், உவமை, சிறுகதை, புராணம், ஓவியம், சிற்பம் முதலியன படிப்படியாகப் பயன்படுகின்றன.

பெயரில்லாதவனுக்குப் பெயரும், உருவமில்லாதவனுக்கு உருவமும் ஏற்படத் தொடங்குகின்றன.

சூழ்நிலைகளின் வேறுபாடு காரணமாக, வெவ்வேறு மொழிகளில், வெவ்வேறு பெயரும் வெவ்வேறு விளக்கங்களும் வெவ்வேறு உருவங்களும் காட்டப்படுகின்றன.

சமயங்கள் உருவாவதற்குக் காரணமானது மெய்ப்பொருள் ஒன்றே. அம்மெய்ப்பொருளை விளக்கும் பெயர்களாலும் விளக்கங்களாலும் உருவங்களாலும் சமயங்கள் வேறுபட்டு நிற்கின்றன.

ஜெகோவா, கிறிஸ்து, சிவன், விஷ்ணு, அல்லா முதலியன பெயரில்லாத நாதனுக்குக் கொடுக்கப்பட்ட பெயர்களே என்ற உண்மை நமக்கு நன்கு விளங்குமானால் உண்மையான இறையடியார்களிடையே மாறுபாட்டிற்கோ வேறுபாட்டிற்கோ சிறிதும் இடம் இல்லை. ஆகவே சிவன் என்பது என்றும் எங்கும் உள்ள இறைவனைக் குறிக்க தமிழர் பயன்படுத்தும் தமிழ்ச் சொல்.

**லிங்கம்** - ''லிங்கம் என்பதற்குக் குறி என்பது பொருள். குறி என்றால் அடையாளம் காணமுடியாத இறைவனைக் காணுவதற்குரிய அடையாளமே சிவலிங்கமாகும்'' என்பார் ஆறுமுக நாவலர். (கே. ஆறுமுக நாவலர் இந்துமத இணைப்பு விளக்கம் — நாகர்கோவில் 1978 - பக் 48).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கள் வாழ்வில் இறைவனையுணர்ந்தவர்கள், தாங்கள் இறைவனையுணர்ந்த இடத்திற்குத் திரும்பவும் வந்து இறைவனை நினைக்கும்படியாக அந்த இடத்தை அடையாளம் கண்டு கொள்வதற்காக அவ்விடத்தில் அடையாளக் குறியை நாட்டினர். அந்த இடத்தில் இறைவன் இருப்பையுணர்கின்ற காரணத்தால் இறைவனின் இல்லமாக அதைக் கருதலாயினர். அவ்விடமே கோவிலாற்று. அவ்வாறு நாட்டப்பட்ட அடையாளக் குறியே பிற்காலத்தில் தமிழில் சிவக்குறி அல்லது சிவலிங்கம் என்ற பெயரைப் பெற்றது. 'சிவலிங்கம்' என்ற பெயர் ஏற்படுவதற்கு வெகு காலத்திற்கு முன்னரே இறைவனின் இருப்பை உணர்த்தும் அடையாளக் குறியாகிய 'சிவலிங்க' உருவம் உள்ளது. ''இலிங்கம் சைவத்திற்கே உரியதாய்க் கொள்ளப்பெறினும் அதன் உட்பொருளைக் கூர்ந்து நோக்கினுல் அது ஒரு சமயத்திற்கு மட்டுமே உரித்தாகாமல் அனைத்துச் சமயங்களும் ஏற்றுக்கொள்ளத்தக்க பொதுமை உடையது என்பது பெறப்படும்'' (வ. ஆ. தேவசேனுபதி சைவ சித்தாந்தத்தின் அடிப்படைகள் - சென்னைப் பல்கலைக் கழகம் 1981 பக் 9).

இன்றுள்ள உலகப் பெரும் சமயங்கள் உருவாவதற்கு முற்பட்ட காலத்தைச் சார்ந்த ஹரப்பா மொகஞ்சதரோ நாகரிகத்தைச் சார்ந்த சிந்து வெளியில் சிவலிங்கங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

''அரப்பாவில் மட்டும் ஏறக்குறைய ஆயிரம் லிங்கங்கள் கிடைத்துள்ளன அவை உருவில் பெரியனவும் சிறியனவுமாக உள்ளன'' (க. த. திருநாவக்கரசு — சிந்து வெளி தரும் ஒளி — வள்ளுவர் பதிப்பகம் - 1971 பக. 92).

''அண்மையில் நடந்துவரும் ஆராய்ச்சிகளின்படி சிந்து வெளிப் பண்பாடு — திராவிடப் பண்பாடு என்று பெரும்பாலான ஆராய்ச்சியாளர் ஏற்றுக் கொண்டுள்ளனர்'' (இரா. நாகசாமி — தமிழ் எழுத்துகள் — கல்வெட்டியல் — தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை வெளியீடு — 1980 — பக் 10).

''சுமேரியா நாகரிகத்தைப் பற்றிய ஹாலின் கொள்கை உண்மையாகுமாஞல் இந்தியாவில்தான் நாகரிகம் முதலில் தோன்றியது. அது முன்னைய திராவிடர்களது சம்பந்தமுடையது என்பது உறுதியாகும். பின்பு அது மெசோபெடோமியாவுக்குச் சென்றது. பாபிலோனிய நாகரிகமும் மற்றும் பிற நாகரிகங்களும் அதனிடத்தினின்றும் தோன்றின. இவையே தற்கால நாகரிகத்திற்கு அடிப்படை என்று டாக்டர் சட்டர்ஜி கூறுகிருர்''. (குமார ஸ்வாமிஜி — வீர சைவம் — கீழை மேலை நாடுகளின் மெய்ப்பொருள் இயல் வரலாறு மொழிபெயர்ப்பு — அண்ணுமலைப் பல்கலைக் கழகம் — 1970 பக் 722).

— நன்றி - திராவிடசமயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்துவே எல்லாமுமாயிருக்கிறார்

"கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்பு கூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்" (கலா 2:20).

கிறிஸ்தவம் என்பது ஒழுங்குபடுத்தப்பட்ட சட்டதிட்டங்களோ, அல்லது கிறிஸ்துவின் போதனைகளை அடிப்படையாகக் கொண்ட சடங்காசாரங்கள், ஆராதனை முறைகள் முதலியவைகளோ, அல்லது ஒருவேளை, ஒரு விசுவாசி கிறிஸ்துவைப் போல வாழுவதற்குத் தன் முழுப்பெலத்தாலும் முயற்சிப்பதோ அல்ல.

அது ஒரு வாழ்க்கை; கிறிஸ்துவுக்குள் புதுசிருஷ்டியாக உருவாக்கப்பட்ட ஒரு விசுவாசியின் உள்ளத்தில் கிறிஸ்து தங்கி வாசம் பண்ணுவதால், அவருடைய ஜீவன், வல்லமை, மகிமை அன்பு யாவும் தாமாகவே வெளிப்படுதலாகிய வாழ்க்கையாகும்.

பரிசுத்தமாக்கப்பட்ட விசுவாசியிலும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையிலும் தொடர்ந்தேர்ச்சியாய்க் கிரியை செய்யும் கிறிஸ்துவின் ஜீவனாய் அது அமைந்திருக்கிறது "கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" என்பது புதிய ஏற்பாட்டின சாராம்சமாகும்.

அது ஒழுங்கும் ஏற்பாடுமாயிராமல், விசுவாசியின் வாழ்க்கை முழுவதும் கிறிஸ்துவின் ஆளுகைக்குட்படுவதால், அவருடைய ஆவி விசுவாசியின் ஆவியுடனே கூட இணைந்து கிரியை நடப்பித்தலாகிய வாழ்க்கையாயிருக்கிறது.

- "எழுதியிருக்கிறபடி மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தரைக் குறித்தே மேன்மைபாராட்டத்தக்கதாக, அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்". (1 கொரி 1:30-31).

- Rev. Sam Selvanayagam.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் வாலிபர் தரிசனங்களைக் காண்பார்கள்.

— சகோதரர் Dr பால் தினகரன் M. A. Ph. D.

**...''நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள்''** (யோவேல் 2:28)

உலகின் முடிவு நாட்களில் நடைபெறப்போகும் பல காரியங்களைக் குறித்து, வேத புத்தகம் பேசும்பொழுது, மேற்கண்ட காரியத்தையும் கூறுகிறது. ''வாலிபர் தரிசனங்களைக் காண்பார்கள்'' என்பது எத்துணை உற்சாகமான ஒரு காரியம்! நல்லது, அவர்கள் என்னென்ன தரிசனங்களைக் காண்பார்கள் என சற்று வேத வசனங்கள் வாயிலாகக் காண்போமா!

**1. அன்பின் தரிசனம்:** ஆண்டவர் தம்முடைய அன்பை நமக்கு வெளிப்படுத்தும்படி தரிசனங்களில் நமக்கு முன் தோன்றுகிறார். தம்முடைய அன்பின் மூலம் நம்மைத் தம்மண்டை இழுத்துக் கொள்கிறார்!

பவுலுடைய வாழ்க்கையை வாசித்துப் பாருங்கள்! அவன் ஆண்டவரை நேசித்த மக்களையெல்லாம் கட்டி, சிறைச்சாலையில் போட்டு, அவர்களை அடித்து, துன்புறுத்தி வந்தான். அந்த 'சவுல்' தமஸ்குவிலுள்ள ஆண்டவருடைய சீஷர்களைப் பிடிக்கச் சென்ற மத்தியான நேரத்தில், சடிதியிலே வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றிப் பிரகாசித்தது! அவன் பிரமித்து, நடுங்கித் தரையிலே விழுந்தான். அப்பொழுது அந்த ஒளியிலிருந்து ஒரு சத்தம், 'சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்?'' என்று ஒலித்தது. அதற்கு அவன் ''ஆண்டவரே, நீர் யார்?'' என்றான் அதற்கு, ''நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே; முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம்'' என்று மீண்டும் ஒரு குரல் ஒலித்தது. அவன் நடுங்கித் திகைத்து: ''ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்'' என்று, அன்றே தன்னை ஆண்டவரிடம் ஒப்படைத்தான். (அப் 9:1-6)

தேவமனிதர் சாது சுந்தர் சிங் வாழ்க்கையும் அப்படித்தான். அவர் ஆண்டவரைப் பற்றி அறிந்து கொள்வதற்குமுன் வாலிபராக இருக்கும்போது, கிறிஸ்தவர்களைப் பார்த்தாலே அவருக்கு மிகுந்த கோபம்வரும். அதிலும் வேத புஸ்தகத்தைப் பார்க்கும்போது அதைக் கிழித்து நெருப்பிலே போட்டுவிடுவார். அப்படிச் செய்வது அவருக்குப் பெருத்த மகிழ்ச்சி!

நாளொன்று வந்தது! திடீரென்று ஒருநாள் அவர் படுத்திருக்கும்போது அவருக்குத் தூக்கமே வரவில்லை ''உண்மைத் தெய்வம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கிருக்கிறார்! அவரைக் காணமுடியுமா'' என்ற எண்ணம் மன அமைதியைக் குலைத்தது. இவ்வாறு அவர் கலங்கிக் கொண்டிருக்கும் அதே வேளையில் இயேசு அவருக்குக் காட்சியளித்து, ''மகனே, நீ துன்பப்படுத்தும் இயேசு நானே'' என்று சொல்லி, மிகுந்த அன்போடு அவரிடம் பேசினார்; அவரைத் தம்மண்டையில் இழுத்துக் கொண்டார்; மட்டுமல்ல அவரை மிகப்பெரிய தேவ ஊழியராகவும் மாற்றினார். அவர் மூலமாக ஆயிரக்கணக்கான மக்கள் ஆண்டவரின் அன்பைப்பற்றி அறிந்து கொண்டார்கள்.

சில நாட்களுக்கு முன்பு ஒரு இளம் வாலிபன் தன் அனுபவத்தை என்னிடம் பகிர்ந்து கொண்டான். ஆண்டவருக்கும், அவனுக்கும் எந்த வித சம்பந்தமும் இல்லை. இந்நிலையில் திடீரென்று அவனுடைய பெற்றோரும் கூட இறந்து போனார்கள். எல்லோரும் அவனைக் கைவிட்டு விட்டார்கள்! அவனுடைய சொத்தையும் பறித்துக் கொண்டார்கள். அவனுக்கு ஆறுதல் அளிக்க, நல் வார்த்தைகள் சொல்ல யாருமே இல்லை. ஒரு அனாதையைப் போல் காணப்பட்டான். ''அன்பு எங்கே? அன்பு எங்கே? என்று தேடித் தேடி அலைந்தான்; அன்பு காட்ட ஒருவரும் இல்லை.

ஒருநாள் அவன் தன்னுடைய அறையில் தனியாக இருக்கும் போது திடீரென்று அவனுடைய கண்கள் திறக்கப்பட்டது. சிலுவை மரத்தில் இயேசு ஆணி கடாவப்பட்டு, சரீரம் எல்லாம் அடிபட்டு, வேதனையில் தொங்குவதைக் கண்டான் அவருடைய தலையில் சூடப்பட்ட முள்முடியிலிருந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. அவருடைய கைகளும், கால்களும் கிழிக்கப்பட்டு இரத்தம் வழிந்தோடிக் கொண்டிருந்தது. அதைப் பார்த்தபோது அவனுடைய உள்ளம் சுக்கு நூறாக உடைந்தது. அவனால் அதைத் தாங்கிக் கொள்ளமுடியவில்லை. ''ஏன்? எதற்காக? இப்படி இயேசுவை வாரினால் அடித்துச் சித்திரவதை செய்திருக்கிறார்கள்?'' என்று அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை. அப்பொழுது இயேசு சிலுவையிலிருந்து அவனோடு பேசினார்.

''என் அருமை மகனே! உனக்காக நான் நொறுக்கப்பட்டேன்! நீ அனாதையாய் அன்பற்ற இந்த உலகத்தில் அலைந்து திரிகிறாய் அல்லவா? மனம் கலங்காதிரு! நானும் அனாதையாய்ச் சிலுவையில் தொங்கினேன்! நீயும் கண்ணீர் விடாதபடி, உன்னைச் சேர்த்துக்கொள்ளும்படி நான் அன்று சிலுவையில் நொறுக்கப்பட்டேன்; தனிமையில் விடப்பட்டேன்என்று சொன்னார். அந்த வார்த்தைகளை அவன் கேட்ட போது ஒரு தெய்வீக சமாதானம் அவன் உள்ளத்தை நிறைத்தது! அவன் கண்ணீரெல்லாம் மாறியது. அந்த நாளில், ''ஆண்டவரே, என் உள்ளத்திற்குள் நீர் வந்து வசியும்! உம் அன்பு என்றும் எனக்கு வேண்டும்'' என்று கதறினான்; ஆண்டவருடைய பிள்ளையாக மாறினான்.

என் அன்பு வாலிப சகோதர, சகோதரிகளே! உங்களிலும் சிலர் ஆண்டவருடைய தரிசனத்தைக் கண்டிருக்கலாம்; அல்லது ஆண்டவர் உங்களோடு பேசியிருக்கலாம்! இன்றே அவர் உங்களுக்குள் வந்து தங்கும்படி அவரை வரவழைப்பீர்களா? அவர் வந்து உங்களோடு தங்குவார்; உங்களை ஆசீர்வதித்து உயர்த்துவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(அ) ஆறுதல்தரும் தரிசனம் :** யோசேப்பின் வாழ்க்கையை வாசித்துப் பாருங்கள். அவனுடைய தந்தை யாக்கோபு அவனை மிகவும் சிநேகித்தார் **(ஆதி 37:3).** முதிர் வயதிலே யோசேப்புத் தனக்குப் பிறந்ததினால், அவனை அதிகமாய் நேசித்து அவனுக்குப் பல வருணமான அங்கியைக் கொடுத்தார். இதைப் பார்த்தவுடன் யோசேப்பின் மற்ற சகோதரர்களுக்கெல்லாம் ஒரே பொறாமை! தாயை இழந்த யோசேப்புக்கு அன்பு காட்ட அவன் சகோதரர்கள்தான் இருந்தார்கள். ஆனால், அவர்களோ அவனை வெறுத்தார்கள்! அந்த அன்பையும் அவனால் பெற முடியவில்லை. ஆனால், ஆண்டவர் யோசேப்பைத் தேடி வந்தார்; அவனுடைய கண்களைத் திறந்தார். சொப்பனங்கள் மூலமாக, தெளிவாக "யோசேப்பே, உன்னை உயர்த்தப் போகிறேன்; உன் சகோதரர்களும் வந்து உன்னைப் பணிந்து கொள்வார்கள்" என்று அன்பு வார்த்தைகள்மூலம் அவனை ஆறுதல் படுத்தினார்.

ஒரு ஆசிரியரை அறிவேன். அவர் என்னிடம், "நான் ஆண்டவர் இயேசுவை அறியாதவன்; அவரை வழிபடாதவன். என் வாழ்க்கையில் எத்தனையோ கஷ்டங்கள் வந்தன! எத்தனையோ பேரை நம்பினேன்! வாழ்க்கையில் ஒன்றுமில்லாதவர்களுக்கு எவ்வளவோ நன்மைகள் செய்து, அவர்களை உயர்த்தினேன்; கடைசியில் அவர்களே என்னைக் கத்தியால் குத்துவதைப்போல் என் முதுகில் குத்தி வெறுத்துத் தள்ளிவிட்டார்கள். "இந்த உலகில் யாரைத்தான் நான் நம்புவது? எல்லோரும் என்னை ஏமாற்றிவிட்டார்களே! எதற்காக நான் வாழ்வது? எங்கு சென்றாலும் ஏமாற்றமாக இருக்கிறதே!" என்று எனக்குள் கலங்கி, மிகவும் மனம் உடைந்து இருந்தேன். அன்று இரவு, கலங்கிய நிலையில் இருந்த என்னை ஒரு தெய்வீகப் பிரசன்னம் சூழ்ந்து கொண்டது. மிகவும் அழகிய மனிதர் ஒருவர் என்முன் தோன்றினார். அவருடைய முடி அவர் தோள்களின் மேல் படர்ந்திருந்தது. அவருடைய மேனி மிகவும் சிவப்பாக இருந்தது. இனிய புன்முறுவலோடு என்னை நோக்கினார்! அவர் பார்வையில் இருந்த அன்பு என் உள்ளத்தை அப்படியே நிறைத்தது. என் அருகில் வந்து, என்னை அணைத்து, தம் மடியில் படுக்க வைத்துக்கொண்டு, என் தலையை மிகுந்த அன்போடு, என் தந்தையைப் போல, பல நிமிடங்கள் தடவிக் கொடுத்துக் கொண்டேயிருந்தார். அவருடைய அன்பு என் மீது பாய்ந்து கொண்டிருந்தது. இப்படியாக ஐந்து முறை என்முன் தோன்றி என்னை ஆறுதற் படுத்தினார். அவர் இயேசுதான் என்பதை நான் நன்கு அறிவேன்" என்று சொன்னார்!

எங்களுக்கு ஒவ்வொரு நாளும் வரும் ஆயிரக்கணக்கான கடிதங்களில், "சகோதரனே, என் சொந்த சகோதரர்கள் என்னைப் பகைக்கிறார்கள்; என் குடும்பத்தார் என்னை வெறுக்கிறார்கள்; உற்றார் உறவினரும் அன்புகாட்டவில்லை. என் அப்பா மட்டும் என்னை நேசித்தார், அவரும் இறந்து போனார். இன்று எனக்கு அன்பு காட்ட ஒருவரும் இல்லை" என்று கண்கலங்கி எழுதும் வாலிபர்களின் கடிதங்கள்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனே, எத்தனே! இதே விதமாக அன்பு காட்ட ஒருவரும் இல்லை என்று ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கிறீர்களா? மனம் கலங்காதிருங்கள்! இந்த உலகம் உங்களைப் பகைக்கலாம்! உங்கள் குடும்பத்தினர், உற்ருர் உறவினர் யாவரும் உங்களைப் பகைக்கலாம்! ஆனல், ஆண்டவர் உங்களைக் கைவிடவே மாட்டார், தரிசனங்கள் மூலமாகத் தோன்றி உங்களை ஆறுதற்படுத்துவார்; உங்கள் கண்ணீரையெல்லாம் துடைப்பார், உங்களை ஆசீர்வதிப்பார். மனம் கலங்காதிருங்கள். (தொடரும்)

---

# வாலிபனே, எழுந்திரு!

இந்தக் கடைசி நாட்களிலே ஆவியானவர் தன்னுடைய ஊழியத்திற்காக அநேகரை எழுப்பும்படியாக விரும்புகிருர். உலகத்தின் முடிவு சமீபமாகி விட்டதினுலே, தேவனுடைய அறுப்புக்காக, தேவனுடைய திராட்சைத் தோட்டத்திலே வேலை செய்வதற்காக, தேவனுடைய சுவிசேஷ ஊழியத்திற்காகத் தன்னுடைய ஜீவனை முன் வைக்கிற அநேகரை அவருடைய கண்கள் கண்டு கொண்டிருக்கிறது.

கர்த்தர் கிதியோனை நோக்கிப் பார்த்து: உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ; நீ இஸ்ரவேலரை மீதியானரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிப்பாய்; உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா என்ருர். (நியா 6:14).

கர்த்தருக்கு ஊழியம் செய்வதைப் போன்ற பெரிய பாக்கியம் வேறு எதுவுமில்லை. வானங்களையும் நட்சத்திரங்களையும் காணப்படுகிறதையும் காணப்படாததையும் தம்முடைய சொல்லினுல் சிருஷ்டித்த அவர், ''உன்னை அனுப்புகிறவர் நானல்லவா'' என்று உன்னிடத்தில் கேட்கிருர். தேசத்தின் தேவையோ மிக அதிகம். அறுப்புக்கு ஆட்களோ இல்லை. கர்த்தர் அங்கலாய்க்கிருர். அவரைக் குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்? அனுப்பப்படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள்? (ரோம 10:14,15).

**ஊழியம் நமது கடமை:-** முதலாவது இந்த சுவிசேஷ ஊழியம் என்பது உன்மேல் விழுந்த கடமை என்பதை உணர்ந்து கொள். இது உன்மேல் விழுந்த கடமை. இயேசு தம் இரத்தத்தைச் சிந்தி உன்பாவங்கள் எல்லாவற்றையும் மன்னித்தார் அல்லவா? தாம் நொறுக்கப்பட்டு உன்னுடைய அக்கிரமங்களையெல்லாம் தழுவினுர் அல்லவா? தன் ஆத்துமாவை மரணத்திலே ஊற்றி, உன் ஆத்துமாவை நரக தண்டனையிலிருந்து தப்புவித்தார் அல்லவா? அவர் தன்னையே மூலதனமாக்கி உனக்காகப் பானபலியாக வார்க்கப்பட்டு உன்னை மீட்டு எடுத்தபடியினுலே நீயும் அவருக்கு ஊழியம் செய்யவேண்டியது உன்மேல் விழுந்த கடமையாகிறது. ''சுவிசேஷத்தை நான் பிரசங்கித்து வந்தும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேன்மைபாராட்ட எனக்கு இடமில்லை; அது என்மேல் விழுந்த கடமை யாயிருக்கிறது. சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ'' என்று பவுல் எழுதுகிறார். (1 கொரி 9:16).

நான் ஆரோனைப் போல அழைக்கப்படவில்லையே, ஆரோனைப் போல் தேவனால் அழைக்கப்பட்டாலொழிய ஒருவனும் இந்தக் கனமான ஊழியத்துக்குத் தானாய் ஏற்படுகிறதில்லை என்று நீ ஒருவேளை உனக்குள்ளே நினைத்துக் கொண்டிருக்கலாம். கர்த்தர் என்னை ஊழியத்திற்கு அழைக்காமல் நான் எப்படி ஊழியத்திற்குப் போவது என்பதைக் குறித்து உன் உள்ளத்திலே ஒரு தடுமாற்றம் இருக்கலாம். உண்மை தான். சுவிசேஷகனாய் இருக்கிற நிலைமை வேறு, முழுநேர ஊழியனாய் நிற்பது வேறு, சபையை நடத்துவது வேறு. இயேசுவின் இரத்தத்தால் மீட்கப்பட்ட ஒவ்வொருவனும் சாட்சியாய், சுவிசேஷகனாய் இருக்க வேண்டும். இதற்குத் தனிப்பட்ட அழைப்பு என்று ஒரு தேவையே கிடையாது. நீ என்றைக்கு இயேசுவினுடைய இரத்தத்தினால், தாகமுள்ள அவருடைய இரத்தத்தினால் மீட்கப்பட்டாயோ அன்றைக்கே ஆத்தும ஆதாயம் செய்யவேண்டிய பொறுப்பு உன்னுடைய தோள்களில் விழுந்து விட்டது. நகரத்திற்கும் அழிவிற்கும் சென்று கொண்டிருக்கிற ஆத்துமாவை மீட்க வேண்டிய கடமை உன்மேல் இருக்கிறது. ஆனால் எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஆசாரிய ஊழியத்திற்கு முழுவதுமாய் இறங்கு முன் கர்த்தரின் திடமான அழைப்பு ஆரோனின் அழைப்பைப் போல் உனக்கு இருக்கிறதா என்று உனக்குள் உறுதிசெய்து கொள். விசேஷமான அழைப்பாக, முழுநேர ஊழியனாக, மேய்ப்பனாக திட்டமான அழைப்பு இருந்தால் ஊழிய போர்க்களத்தில் இறங்கு, அப்படி இல்லாவிட்டால் பகுதிநேர சுவிசேஷகனாக கர்த்தருக்கு ஊழியம் செய்வது நல்லது.

கலப்பையின் மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப் பார்க்கிற எவனும் கர்த்தருடைய ராஜ்யத்திற்குத் தகுதியுள்ளவன் அல்ல என்று கர்த்தர் சொல்லுகிறார். காற்றைக் கவனிக்கிறவன் விதைக்கமாட்டான்; மேகங்களை நோக்குகிறவன் அறுக்கமாட்டான் என்று பிரசங்கி எச்சரிக்கிறார் (பிர 11:4). முழுநேர ஊழியத்திற்கு அழைப்பு இல்லாவிட்டால் நீ நிட்சயமாகப் பகுதிநேர சுவிசேஷகனாக இருக்க வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. வயிற்றுப் பிழைப்புக்காக உலகவேலைக்குச் செல்கிற நேரத்தைத் தவிர மற்ற எல்லா நேரத்தையும் கர்த்தருக்காகச் செலவிடு. வெட்கப்படாதே! ''என்னைக் குறித்தும் என் வார்த்தைகளைக் குறித்தும் எவன் வெட்கப்படுகிறானோ அவனைக் குறித்து மனுஷகுமாரனும் தம்முடைய மகிமையோடும் பிதாவின் மகிமையோடும் பரிசுத்த தூதர்களின் மகிமையோடும் வரும்போது வெட்கப்படுவார்''. (லூக்கா 9:26)

சுவிசேஷ ஊழியத்தைச் செய்யாமல் அசதியாயிருந்துவிட்டு சாக்குப்போக்குச் சொல்லித் தப்பித்துக் கொள்ளலாம் என்று நினைக்காதே! சிருஷ்டிகரின் கட்டளை தெளிவாய் வெளிவருகிறது: ''நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். நீங்கள் பூமியின் கடைசி பரியந்தம் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்''. ஆகையால் உனக்கிருக்கிற இந்தப் பெலத்தோடேபோ! தாமதம் பண்ணாதே!

— சகோ J. சாம். ஜெபத்துரையின்
நூலிலிருந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய - கிறிஸ்தவ கண்ணோட்டம்

பரிசுத்த வேதாகமத்திலே ஆண்டவரின் இரண்டாம் வருகையைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிற ஆதாரங்களின்படி எமது அண்டை நாடாகிய இந்தியாவின் நிலைமை என்னவாகலாம் என்பதைப்பற்றி ஒரு கண்ணோட்டம் செய்து பார்ப்பது நல்லது என்று பல வேத ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

1990 ஆம் ஆண்டு, உண்மையான கணக்கின்படி 1994 என்று கருதப்படுகின்றது. அந்திக் கிறிஸ்துவின் 7 வருட ஆட்சியின் முதல் ஆண்டாக இது இருக்கலாம் (தானி 9:27). பரிசுத்த ஆவியானவர் ஆவிக்குரிய சபையை அழைத்துச் சென்றுவிட்டால், உலகமானது சம்பத்தை இழந்து (மல்கி 3:17) சட்டிபானை மட்டுமுள்ள வீடுபோல் வெறுமையாய் விளங்கும்.

அதே சூழ்நிலையில் முதலாவது போர் ஆரம்பிக்கும். இஸ்ரவேலைச் சூழ்ந்திருக்கும் நாடுகள் எகிப்தின் தலைமையில் இஸ்ரவேலை இந் நாட்களில், சேமித்து வைத்திருக்கும் ஏராளமான ஆயுதங்களால் தாக்கும். (ஏசாயா 19:1-17). ஆனால் தேவனாகிய கர்த்தர் அதிசயமாய் எருசலேமைக் காப்பார். (ஏசா. 31:5).

இதைத் தொடர்ந்து ரஷ்யா இஸ்ரவேலைத் தாக்கும்(எசேக்38:22). இது இந்த ஆண்டின் ஆரம்பத்திலேயே நடைபெறலாம். ஏனெனில் இஸ்ரவேல் எதிரிகளின் ஆயுதங்களை எடுத்து 7 ஆண்டுகள் எரிப்பார்கள்,

இந்தப் போரில் சாவோர் உலகமக்களில் கால் பங்கு பேர். ஆகையால் இப்போர் இஸ்ரவேலுக்கும் ரஷ்யாவுக்கும் மட்டுமுள்ளதல்ல, உலகப்போராகவே இது மாறும் என்று விளங்குகிறது. இப்போர்களில், உலகமக்களில் ¾ பங்கு பேர் மடிவார்கள் என்று வாக்கியங்களால் அறிகிறோம். (வெளி 6:8; 9:15; 9:18).

''இந்தப் புதிய ஆண்டிலிருந்து (1990) இந்தியாவின் நிலைமை என்னவாகும்?'' என்பது ஒரு பெரிய கேள்வியாகும்.

சர்வவல்லதேவன் இஸ்ரவேலைத் தன் தண்டாயுதமாய்க் கையிலெடுத்து (எரே 51:19-53) தனக்கெதிரான நாடுகளை — முக்கியமாகத் ''தேவனில்லை'' என்று கூறும் ரஷ்யாவை—நொறுக்கும் போது அதோடு இணைந்து நிற்கும் இந்தியா அதே நொறுக்குதலுக்கு ஆளாகலாம் என்பதைப் பலரும் ஊகிக்கலாம்.

தேவன் எழுதிய ஒரே வேதமாகிய ''பைபிள்'' தேவன் ஒருவரே என்பதனை மிகத் தெளிவும் திட்டமுமாய்ப் போதிக்கிறது. (1 கொரி 8:5,6) (ஏசாயா 43:11;40:28;44:6;45:18).

அவர் ''என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்'' என்று கண்டிப்பாய்க் கட்டளையிட்டிருக்கிறார் (யாத் 20:3).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனை உண்டுபண்ணிய மகிமையின் தேவனுக்கு மனவேதனையை உண்டு பண்ணும் இன்னுமொரு காரியம், அவர் தமது சொந்த சாயயில் (ஆதி 1:26) ஞானமுள்ளவர்களாய்ப் படைத்த மனிதர் ''தங்கள் (சொந்த) கைகளின் கிரியையையும், தங்கள் (சொந்த) விரல்கள் உண்டு பண்ணினதையும் பணிந்து கொள்கிறார்கள், (ஏசா 2:8), என்பதே.

''வானத்தையும் பூமியையும் உண்டாக்காத தெய்வங்கள் பூமியிலும் இந்த வானத்தின் கீழும் இராதபடிக்கு அழிந்து போகும்'' என்றும் (ஏரே 10:11) ''விக்கிரகங்கள் கட்டோடே ஒழிந்துபோம்'' என்றும் (ஏசா 9:18) சர்வவல்லதேவன் தாம் எழுதிய புத்தகத்தில் எழுதியிருக்கிறார். இந்த அழிவே இப்புதிய ஆண்டிலிருந்து ஆரம்பிப்பதாகும்.

அணு ஆயுதங்களால் ஏற்படும் அக்கினியால் அழியப்போகும் பாரதம் போன்ற விசாலமான எல்லையுடைய தேசமக்களை எச்சரிப்பதற்காக வைக்கப்பட்டிருக்கும் கிறிஸ்தவ சபைகள் எச்சரிக்கத் தவறுவார்களானால் தேவன் அவர்களின் இரத்தப்பழியைக் கிறிஸ்தவ சபைகளிடம் கேட்பாரே! தப்பக்கூடுமா? (எசேக் 33:6-8).

இந்த அழிவைப்பற்றி மிகத் தெளிவாய்க் கூறுவது பைபிள் மட்டுமே. இதற்கு விலக்கிக் காக்கக் கூடியவர் மெய்யான தேவனை (1 யோவா 5:20) இயேசுகிறிஸ்துவே. (யோவா 14:1-3) கர்த்தராகிய இயேசுவே மெய்யான தேவன் என்னும் உண்மை பாரதப் பெருந்தலைவர்களுக்குத் தெரியாத ஒன்றல்ல.

காலஞ்சென்ற தமிழகத் தலைவர் M.G.R. தி.மு.க தலைவராயிருந்த காலத்தில் அவரோடு தீவிரவாதியாய் உழைத்த பாக்கியமணி என்னும் பேருள்ள ஒருவரிருந்தார். ஒருநாள் அவர் தன் தலைவரிடம் ''ஐயா! நம் கொள்கை ஒன்றே குலம்'', 'ஒருவனே தேவன்' என்பது தானே. அந்த ஒரே தேவனுக்குக் கீழே பாரதம் முழுவதையும் ஒரேகுலம் ஆக்கத் திட்டமிடுகிறேன், 'அவர் யார்?' என்று கேட்டார்.

M.G.R., 'பாக்கியமணி, அந்த ஒரே தேவன் இயேசுகிறிஸ்துவே' என்று உறுதியாகச் சொன்னார். உடனே பாக்கியமணி என்பவர் பழைய எஜமானை விட்டு புதிய எஜமானைத் தெரிந்து கொண்டார். தி.மு.க. வைச் சேவிப்பதைவிட ஒரே தேவனைச் சேவிப்பதல்லவா மேல் என்று முடிவு கட்டினார். இன்று அவர் அம்பாசமுத்திரம் அருகில் கல்லிடைக்குறிச்சி என்னுமிடத்தில் கிறிஸ்தவ சேவை செய்து கொண்டிருக்கிறார்.

சுமார் 60 ஆண்டுகளுக்கு முன் M. A (Phil) முதல் வகுப்பில் தேறி, மத்திய அரசில் மதிப்புள்ள உத்தியோகம் பெற்ற வாலிபர் ஒருவர், அன்று பாரத ராஷ்டிரபதியாயிருந்த பெருமதிப்புக்குரிய டாக்டர் ராதா கிருஷ்ணன் அவர்களிடம்'' அங்கிள், நான் ஒரு உண்மை மனிதனாய் வாழ விரும்புகிறேன்; அதற்கு யாரைப் பின்பற்றலாம் என்று கேட்ட பொழுது அந்தப் பெரியார் அளித்த பதில், ''மகனே நீ ஒரு உண்மை மனிதனாய் (Real Man) வாழ விரும்பினால் ஆண்டவர் இயேசுவைப் பின்பற்று'' என்பதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பதிலளித்த டாக்டர் ராதாகிருஷ்ணன் மறைந்து விட்டாலும் அவரிடம் கேட்டுப் பதில் பெற்ற சகோ: பால் சுதாக்கர் M. A. இன்று நாகர் கோவிலில் இருக்கிறார். (விலாசம் - Chellakkan St; water Tank Road). மனிதன் மனிதனும் வாழப் பின்பற்ற வேண்டியது யாரை?

சகோ. பால் சுதாக்கர் உடன் தானே பைபிள் வாங்கிப் படித்து ஆண்டவர் இயேசுவின் வாழ்க்கை உபதேசம் யாவும் படித்து கிறிஸ்துவைப் பின்பற்றத் தீர்மானித்து, இந்தியாவில் கிறிஸ்துவைப் போதித்து, இங்கிலாந்து சென்று எலிசபெத் அரசியின் சகோதரி வீட்டில் தங்கி அங்குள்ள சர்வகலாசாலைகளிலெல்லாம் கிறிஸ்துவைப் பிரசங்கித்து வந்திருக்கிறார்.

பாரத வேதாந்த தத்துவ நிபுணர்களில் மிகப்பெரியவராய்க் கருதப்படும் சுவாமி விவேகானந்தர் அவர்கள் எழுதிய ஞானதீபச்சுடர் என்னும் தொகுப்பு, சுடர் 7, பக்கம் 270ல் இவ்வாறு காணப்படுகிறது.

''ஏசுக்கிறிஸ்துவை, மனித உருக் கொண்ட தெய்வத்தை நாம் தெய்வமாக வணங்க வேண்டும். உங்களுக்கு வீடுபேறு வேண்டுமானால் ஏசுக்கிறிஸ்துவுடன் நெருங்கிய தொடர்பினைக் கொள்ளுங்கள்; ஏனெனில் உங்கள் எண்ணத்தால் எண்ணும் எந்தக் கடவுளைக் காட்டிலும் மிகவும் உயர்ந்த நிலையில் இருப்பவர் இயேசுவே. ஏசு ஒரு மனிதரே என்று நீங்கள் நினைப்பீர்களாயின் அவரை நீங்கள் வணங்கவேண்டாம். ஏசுவே கடவுள் என்ற உண்மை உங்களுக்குப் புலப்படுகின்றபோது அவரை நீங்கள் வணங்கலாம்''.

இதைவிட ஒரு பெரியசாட்சி இந்தியாவுக்குத் தேவன் கொடுக்கக்கூடுமா? இதையும் ஏற்றுக்கொள்ள முடியாது போகுமானால் பாரதம் அழிவுக்குத் தப்புவதெப்படி?

காலஞ்சென்ற மாபெருந் தலைவர் ராஜாஜி அவர்கள் ஒரு தருணத்தில் பின்வரும் எச்சரிப்பைக் கூறினார்: ''கிறிஸ்தவத்துக்கெதிராய் உங்கள் கையை நீட்டாதிருங்கள். அது நெருப்பு; நீட்டினால் உங்கள் கை வெந்துபோகுமேதவிர அந்த நெருப்பு அவிந்து போகாது.

அவர் அவ்வாறு கூறக்காரணம் அவர் சிறந்த சரித்திர மேதை. உலகச் சரித்திரத்தையும், சிறப்பாய் உரோமச் சரித்திரத்தையும் அவர் அறிந்தவர். உரோமச்சரித்திரத்தில் அவரையும் எவரையும் உணர்த்தும் ஒரு பகுதி — உண்டு. அது கிறிஸ்துவைப் பகைப்போருக்கு நேரிடும் கொடிய வேதனையே, கிறிஸ்துவையும் அவரது மார்க்கத்தாரையும் ஒழித்துக் கட்டத் துணிந்த உரோம சாம்ராஜ்யம் படுதோல்வியடைந்தது. அதற்காகக் கொடிய கொடூர நடவடிக்கைகளில் ஈடுபட்ட சக்கரவர்த்திகள் அதோகதியடைந்தனர்.

மக்களால் ''ஆண்டவரும் தேவனும்'' என்றழைக்கப்பட்ட நீரோ அரசன் நிம்மதி இழந்து கவலை மிகுதியால் தற்கொலை செய்து கொண்டான். டொமிஷியனை அவன் வாழ்க்கையின் செய்கையில் வெறுப்புக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட பணியாட்களே படுகொலை செய்தனர். ஹேட்லியன் பயங்கர நோயால் பீடிக்கப்பட்டு கொடிய வேதனை அனுபவித்து மரித்தான்.

செவறஸ் என்னும் அரசன் தன் சொந்த மகனுடைய துரோகத்தால் கொலை செய்யப்பட்டான். மாக்ஸிமஸ் என்ற அரசன் முன்றே ஆண்டுகள் அரசுபுரிந்து கொடிய அகால மரணமடைந்தான். டேஷியஸ் என்னும் அரசன் சேற்றில் புதைந்து மடிந்தான். அவன் உடலே எடுக்கப்படவில்லை.

வல்லேரியன், பெர்ஷியரால் பிடிக்கப்பட்டு உயிரோடு தோல் உரிக்கப்பட்டு நிர்ப்பாக்கிய மரணமடைந்தான். டியோக்ளீஷியன் தன் பதவியை இழந்து பைத்தியக்காரனாய் வாழ்க்கையை முடித்தான். மாக்ஸிமனஸ் லவேரியஸ் அரசுரிமையை இழந்து கவலைதாங்க முடியாதவனாய் நான்று கொண்டு உயிரைப் போக்கினன்.

இயேசு என்ற நாமத்தை உலகத்திலிருந்து அடியோடு அகற்றிவிட உறுதியான சபதம் செய்து கொண்ட ஜூலியன் போரில் படுகாயமடைந்து விழுந்து, தன் உடலிலிருந்து வடிந்து உறைந்த உதிரத்தைத் தன்கையால் அள்ளி வானத்துக்கு நேராய் எறிந்து ''நசரேயனே, நீயே வெற்றியடைந்தாய்'' என்று கூறிக்கொண்டே உயிரை விட்டான்.

கி. பி. 312ல் அரசுரிமை ஏற்ற கான்ஸ்டன்டைன் என்ற அரசன் நீண்டகாலமாய்ச் சரித்திரத்தைப் படித்து தனக்குமுன்னே ஆட்சி செய்து கிறிஸ்தவத்தை அழிக்கத் திட்டமிட்டுத் தங்களுக்கே அழிவை வரவழைத்துக் கொண்ட பேரரசர் பத்துப்பேரின் அகோரமுடிவை ஆராய்ந்து ''அப்பப்பா'' இவ்வித முடிவு எனக்கு வேண்டாம். நான் கிறிஸ்துவத்தை எதிர்க்கத் துணியமாட்டேன்; கிறிஸ்துவே மெய்த்தேவன்; அவர் மதத்தையே ஆதரிப்பேன்' என்று தீர்மானஞ் செய்தான்.

இந்த வெளிப்பாடுகளே மகான் ராஜாஜி ''கிறிஸ்தவத்துக்கு எதிராய்க் கையை நீட்டாதே, உன் கைதான் அவியுமேதவிர அதை அழிக்க உன்னால் கூடாது'' என்று உறுதியாய்க் கூற ஏவியது. இன்று பாரதம் இந்தச் சத்தியத்தை அறிந்து கொள்வது மிக மிக அவசியம். இதை எடுத்துக் கூறுவது சபைகளின் விசுவாசிகள் ஒவ்வொருவரின் கடமையாகும்.

''அவர் வருகிறார், அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார்.........'' (சங் 96:13). ஜீவனையும் இரட்சிப்பையும், வேதத்தையும், சபையையும் ஊழியக்காரரையும் தந்தவர் ''நீ சம்பாதித்த தாலந்து (ஆத்துமா) எங்கே?'' என்று கேட்கும் போது ''ஒன்றுமில்லை'', என்பாயானால் உனக்கு நேரிடுவதை (மத்தேயு 25:30)ல் பார்க்கலாம்.

காலம் முழுவதையும் கர்த்தருக்கே கொடுங்கள் — வாழ்க்கை, செல்வம், செல்வாக்கு, தாலந்து, பெலன், அறிவு முழுவதையும் கல்வாரி நேசருக்காகவே கொடுங்கள்.

— வருகையின் தூதன் இலங்கைப் பிரதிநிதி —
Rev. Sam Selvanayagam.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழிலிருந்து எட்டாவதானவன்.(5)

பெல்ஜியத்திலுள்ள ஏழாவது வல்லரசின் தலைமையகக் கட்டடத்திலே 3 அடுக்குமாடி உயரமுள்ள ஒரு பெரிய கம்பியூட்டர் வைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கம்பியூட்டர் உலகமெங்குமுள்ள 5 பில்லியன் மக்களின் தகவல்களையும் கணக்கிடும் ஆற்றல் வாய்ந்ததாய் இருக்கிறது. இந்தக் கம்பியூட்டருடைய பெயர் Beast என்று அழைக்கப்படுகிறது. அந்திக்கிறிஸ்துவை மிருகம் என்று வேதம் சொல்லுவதை அறிவீர்கள். இந்தக் கம்பியூட்டருக்கு மிருகம் என்று பெயரிட்டிருக்கிறார்கள். பல தீர்க்கதரிசன ஆராய்ச்சியாளர்கள் ஏழிலிருந்து எட்டாவதானவன் எழும்புவதற்கு இவைகளெல்லாம் ஆதாரமாயிருக்கின்றன என்று தீர்மானித்திருக்கிறார்கள்.

காலம் சமீபமாயிற்று, காலம் நிறைவேறிற்று, இனிக்காலம் செல்லாது. அந்திக்கிறிஸ்துவினுடைய ஆட்சிக் காலத்திலே நடைபெறப் போகிற காரியங்களுக்கு இந்த உலகம் பொருளாதார ரீதியிலும், விஞ்ஞான ரீதியிலும் எப்படி ஆயத்தமாகி இருக்கிறது என்பதற்கான செய்திகளை, இனி நான் உங்கள் மத்தியிலே பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

இந்த அந்திக்கிறிஸ்துவின் நாட்கள் எத்தனை வருடமாய் இருக்கும் என்பதற்கான ஒரேயொரு குறிப்பை மாத்திரம் பார்ப்போம். தானியேல் தீர்க்கதரிசன புஸ்தகம் 9ம் அதிகாரம் 27ம் வசனத்தில் ''அவன் ஒரு வாரமளவும் அநேகருக்கு உடன்படிக்கையை உறுதிப்படுத்தி...'' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதிலே பெரிய இரகசியங்களைத் தானியேலுக்கு ஆண்டவர் வெளிப்படுத்தியிருக்கிறார். ஆனால் இந்த இடத்திலே நான் எடுக்கவிரும்புகிற ஒரேயொரு குறிப்பு ''அவர்'' என்பது ஆண்டவரைக் குறிக்கவில்லை அந்திக்கிறிஸ்துவைக் குறிப்பதாகும் (என்பதே). இது, தமிழிலே மரியாதைப் பன்மையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அவன் ஒருவாரமளவும் அநேகருக்கு உடன்படிக்கையை ஏற்படுத்துவானும். யார் அவன்? அந்திக்கிறிஸ்து வரும்போது அநேகருக்கு அவன் உடன்படிக்கையை ஏற்படுத்துவானும்.

நன்றாய்க் கவனித்துக் கொள்ளுங்கள்! உலகத்தின் கடைசிச் சர்வாதிகாரியான அந்திக்கிறிஸ்து வரும்போது அவன் ஒரு கொடூர முகத்தோடும் கொடூர தோற்றத்தோடும் வரப்போவதில்லை. He is going to come as a false Messiah promising peace for this world. அந்திக்கிறிஸ்து இந்த உலகத்திற்கு வரும்போது பொய்ச்சமாதானத்தை வாக்குப்பண்ணுகிறவனாய் வரப்போகிறான். சமாதானத்தை வாக்குப்பண்ணுகிறவனாய் வருகிறவனை உலகம் ஏற்றுக்கொள்ளும். அந்திக்கிறிஸ்து உலகத்தை ஏமாற்றுகிறவனாய் வருவான். எனவே அவன் கொடூர முகத்தோடு வரப்போகிறதில்லை; அவன் ஒரு தேவனைப்போல வருவான். அவன் வரும்போது ஒரு வாரத்திற்கு உடன்படிக்கை செய்வான் என்று சொல்லப்பட்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வாரம் என்ற பதத்திற்கு மூலபாஷையிலே பயன்படுத்தப் பட்டிருக்கிற வார்த்தை "ஷாபுவா" என்பதாகும். எபிரேய மொழியிலே "ஷாபுவா" என்ற பதத்திற்கு வாரம் என்றும் அர்த்தம் ஏழு என்றும் அர்த்தம். எனவேதான் தமிழிலே மொழிபெயர்க்கும்போது அதை வாரம் என்று மொழிபெயர்த்திருக்கிறார்கள். வாரம் என்றும் அர்த்தம் உண்டு, ஏழு என்றும் அர்த்தம் உண்டு. அதாவது அந்திக்கிறிஸ்து வரும்போது ஏழுவருட உடன்படிக்கையைச் செய்வானும். The Hebrew root word shabuwa means **week** and also the number **Seven.** Here it denotes the seven year covnent the Antichrist will make in this world when he comes to rule the world. அந்திக்கிறிஸ்து இந்த உலகத்தை ஆளவரும் பொழுது அவன் செய்யப்போகிற ஏழுவருட உடன்படிக்கையை இது தெரிவிக்கிறது. எனவே அந்திக்கிறிஸ்து வினுடைய ஆட்சிக்காலம் 7 வருடமாய் இருக்கும் என்று தானியேல் தீர்க்கதரிசனத்திலிருந்து அறிகிறோம். இந்த அந்திக்கிறிஸ்து உலகத்தை ஆளுவதற்கு முன்னதாய் சபையை ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய இரகசிய வருகையிலே எடுத்துக் கொள்வார் என்று நான் உங்களுக்குத் தெரிவித்திருக்கிறேன்.

இந்த அந்திக்கிறிஸ்துவின் நாட்களிலே நடைபெறப்போகிற காரியங்கள் என்ன? இந்த அந்திக்கிறிஸ்துவின் காலத்திலே அவன் கொண்டுவரப்போகிற சட்டங்கள் என்ன? இதைக் குறித்து வெளிப் படுத்தின விசேஷத்திலே யோவான் தெரிவித்திருக்கின்றான். அந்தக் காரியங்களெல்லாம் நிறைவேறிவிட்டனவா? அதற்கு எல்லாம் முன் னோடியாக அமைந்துவிட்டனவா என்பதற்கான ஆதாரச் சான்றுகளை இந்த(நாளின்)செய்தியிலே நான் உங்களுக்குத் தெரிவிக்கப் போகிறேன்.

வெளிப்படுத்தின விசேஷத்தின் 11ம் அதிகாரத்தின் 3ம் வச னத்தைக் கவனிப்பீர்கள் என்றால், அந்திக்கிறிஸ்து இந்த உலகத்தை ஆண்டு கொண்டிருக்கும்போது இரண்டு தீர்க்கதரிசிகள் தோன்றுவார் கள் என்று யோவான் முன்னறிவித்திருக்கிறான். John the Apostle prophesizes that there will be two witnesses coming out of JERUSALEM and give warning messages to the world during the period of the Antichrist. இவர்கள் எத்தனை நாட்களுக்குத் தீர்க்க தரிசனம் சொல்லுவார்கள்? யோவான் தெரிவித்திருக்கிறான் 1260 நாட் களுக்குத் அவர்கள் தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள் என்று. One thousand two hundred and sixty days they will prophesize. 1260 நாட்கள் என்பதைக் கணக்கிட்டுப் பார்த்தால் அது எத்தனை வருடம் என்பதைத் தெளிவாய்க் காணலாம்.

1260 நாட்கள் என்பது $3\frac{1}{2}$ வருடங்களைக் குறிப்பதாகும். அந்திக் கிறிஸ்துவின் ஆட்சிக்காலமாகிய 7 வருடத்தின் பாதிக் காலத்திலே இவர்கள் தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள். எபிரேய முறைப்படி ஒரு வருடத்திற்கு 12 மாதங்கள்; ஒரு மாதத்திற்கு 30 நாட்கள். ஆகவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வருடத்திற்கு 360 நாட்கள் தான். One thousand two hundred and sixty days these two Gods' prophets will be prophesizing from the city of Jerusalem. இந்த இரண்டு தீர்க்கதரிசிகளும் 1260 நாட்கள் தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள் என்று வெளிப்படுத்தின விசேஷத்திலே யோவான் தெரிவித்திருக்கிறுன்.

இவர்கள் தீர்க்கதரிசனம் சொல்லும் நோக்கம் என்ன? அதற்கு என்ன காரணம்? உலகத்திலுள்ள ஊழியக்காரர்களெல்லாம் தேவனுடைய பிள்ளைகள் எல்லாம், உலகத்திலிருந்து எடுத்துக் கொள்ளப் பட்டிருப்பதினுலே, இந்த இரண்டு தீர்க்கதரிசிகள் உலகமக்களுக்கு எச்சரிப்பின் சத்தத்தைக் கொடுப்பார்கள். அப்படி இவர்கள் சத்தத்தைக் கொடுக்கும்போது என்னென்னவெல்லாம் நடக்கும் என்பதை 5ம் வசனத்திலே யோவான் தெரிவிப்பதைக் கவனியுங்கள்.

வெளி 11:5 ''ஒருவன் அவர்களைச் சேதப்படுத்த மனதாயிருந்தால், அவர்களுடைய வாயிலிருந்து அக்கினி புறப்பட்டு, அவர்களுடைய சத்துருக்களைப் பட்சிக்கும்; அவர்களைச் சேதப்படுத்த மனதாயிருக்கிறவன் எவனே அவன் அப்படியே கொல்லப்படவேண்டும்.''

அவர்களுக்கு எதிராய் அந்தக் தீர்க்கதரிசிகளுக்கு எதிராய் யாராவது வந்தால், அந்தத் தீர்க்கதரிசிகளின் வாயிலிருந்து அக்கினி புறப்பட்டு அந்த எதிரிகளைப் பட்சிக்குமாம். அது மாத்திரமல்ல, ஆறுவது வசனத்திலே சொல்லப்பட்டிருக்கிறது, ''மழை பெய்யாதபடிக்கு வானத்தை அடைக்க அவர்களுக்கு அதிகாரமுண்டு; அவர்கள் தண்ணீர்களை இரத்தமாக மாற்றவும், தங்களுக்கு வேண்டும்போதெல்லாம் பூமியைச் சகலவித வாதைகளாலும் வாதிக்கவும் அவர்களுக்கு அதிகாரமுண்டு.''

வானத்திலிருந்து தண்ணீர் விழ மழை பெய்யாது; பூமியிலுள்ள தண்ணீரெல்லாம் இவர்களால் இரத்தமாக மாற்றப்படும். இந்த இரண்டு தேவனுடைய தீர்க்கதரிசிகளும் உலகமக்களுக்கு எச்சரிக்கை கொடுத்து, அவர்களுக்கு மனம் திரும்பக் கட்டளை கொடுப்பார்கள். இந்த எச்சரிப்பின் சத்தத்தை அவர்களுக்கு இவர்கள் கொடுக்கும்போது வானத்தை அடைப்பார்கள். தண்ணீரையெல்லாம் இரத்தமாக மாற்றுவார்கள் என்று யோவான் தெரிவித்திருக்கிறுன். அடுத்ததாய் என்ன நடக்குமாம்?

ஏழாம் வசனத்திலே சொல்லப்பட்டிருக்கிறது, ''அவர்கள் தங்கள் சாட்சியை சொல்லி முடித்திருக்கும் போது, பாதாளத்திலிருந்தேறுகிற மிருகம் அவர்களோடே யுத்தம் பண்ணி, அவர்களை ஜெயித்து அவர்களைக் கொன்றுபோடும்''. யார் இந்தப் பாதாளத்திலிருந்து ஏறுகிற மிருகம்? முன்பு சொன்னேன் பாதாளத்திலிருந்து ஏறுகிற மிருகம் அந்திக்கிறிஸ்து என்பதாக. இந்த அந்திக்கிறிஸ்து, இந்த இரண்டு தீர்க்கதரிசிகளும் தங்கள் தீர்க்கதரிசன ஊழியத்தை முடித்தவுடனே அவர்களைக் கொலைசெய்து போடுவாளும். எங்கே கொலை செய்து போடுவாளும்?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டாவது வசனத்திலே பாருங்கள். ''அவர்களுடைய உடல்கள் மகா நகரத்தின் விசாலமான வீதியிலே கிடக்கும். அந்த நகரம் சோதோம் என்றும் எகிப்து என்றும் ஞானார்த்தமாய்ச் சொல்லப்படும்''. இந்த வசனத்தை வாசித்தால் எந்த நகரத்திலே இந்த இரண்டு தீர்க்கதரிசிகள் கொலை செய்யப்படுவார்கள் என்பது தெளிவாய்ச் சொல்லப்படவில்லை. ஆனால் அடுத்த வாக்கியத்தைக் கவனியுங்கள்'' அதிலே நம்முடைய கர்த்தரும் சிலுவையிலே அறையப்பட்டார் என்று யோவான் தெரிவிக்கிறான். எந்த நகரத்திலே நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார்? எருசலேம் நகரத்திலே. எனவே எருசலேம் நகரத்திலே இந்த இரண்டு தீர்க்கதரிசிகளின் சரீரங்களும் கொலை செய்யப்பட்டு வீதியிலே வீசி எறியப்படுமாம். அப்போது என்ன நடக்கும்?

9வது வசனத்தைக் கவனியுங்கள். ''ஜனங்களிலும், கோத்திரங்களிலும், பாஷைக்காரரிலும், ஜாதிகளிலுமுள்ளவர்கள் அவர்களுடைய உடல்களை மூன்றரைநாள் வரைக்கும் பார்ப்பார்கள்.''

இந்த இரண்டு தீர்க்கதரிசிகளின் சரீரமும் எருசலேமின் மகா வீதியிலே கொலைசெய்யப்பட்டுத் தூக்கியெறியப்பட்டுக்கிடக்கிறதை உலகத்தின் மக்களெல்லாம் பார்ப்பார்களாம். These God's Two prophets would be assacinated by the Antichrist and their bodies will be thrown in the streets of Jerusalem.

ஒரு மூலமொழி பெயர்ப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது, ''All nations will see the two bodies of the two prophets'' என்பதாக. பாருங்கள் வசனத்தைத் தொடர்ச்சியாய், அவர்களை அடக்கம் செய்வதற்கு அந்திக்கிறிஸ்து அனுமதிக்கமாட்டானும். $3\frac{1}{2}$ நாட்களுக்கு அவர்களுடைய சரீரம் எருசலேமின் மகா வீதியிலே கிடக்குமாம். அநேக வருடங்களாய் இந்தத் தீர்க்கதரிசனத்துக்கு எதிராய் ஒருகேள்வி கேட்கப்பட்டது. எப்படி, எருசலேமின் மகாவீதிகளிலே கிடக்கக்கூடிய இரண்டு தீர்க்கதரிசிகளின் சரீரத்தை உலகமக்களெல்லாம் பார்க்கமுடியும். எப்படிப் பார்க்கமுடியும் என்பது ஒரு பெரிய கேள்விக்குறியாய் இருந்தது.

உலகமெங்கும் இப்பொழுது வெகுவேகமாகப் பரவிவருகிற டெலிவிஷன் அதற்குப் பதில சொல்லுகிறது டெலிவிஷனிலே இந்த இரண்டு தீர்க்கதரிசிகளின் சரீரங்களும் காண்பிக்கப்படும். உலகமக்களெல்லாரும் அதைப் பார்ப்பார்கள். உலகமக்கள் பார்த்துக்கொண்டிருக்கும்போது என்ன நடக்கும். மீண்டும் 9வது வசனத்தைப் பார்த்து 10ம் வசனத்திலிருந்து தொடர்வோம்.

வெளி 11:9 ஜனங்களிலும், கோத்திரங்களிலும், பாஷைக்காரரிலும், ஜாதிகளிலுமுள்ளவர்கள் அவர்களுடைய உடல்களை $3\frac{1}{2}$ நாள் வரைக்கும் பார்ப்பார்கள். அவர்களுடைய உடல்களைக் கல்லறைகளில் வைக்கவொட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11:10 அவ்விரண்டு தீர்க்கதரிசிகளும் பூமியின் குடிகளை வேதனைப் படுத்தினபடியால் அவர்கள் நிமித்தம் பூமியில் குடியிருக்கிறவர்கள் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து, ஒருவருக்கொருவர் வெகுமதிகளை அனுப்பு வார்கள்.

இந்த இரண்டு தீர்க்கதரிசிகளும் மழை பெய்யாமல் வானத்தை அடைத்ததாலும், தண்ணீரை இரத்தமாக மாற்றினதினாலும், அந்திக் கிறிஸ்து இவர்களைக் கொன்றுபோட்டதினாலும், உலகமக்களெல்லாம் அந்த இரண்டு தீர்க்கதரிசிகளின் சரீரங்கள் எருசலேம் வீதிகளிலே கிடக்கிறதை ரெலிவிஷன் திரையிலே பார்த்துவிட்டு, சந்தோஷம் கொண்டாடி வெகுமதிகளைப் பரிமாறிக்கொள்வார்களாம். அடுத்ததாய் என்ன நடக்கும் என்பதை யோவான் தெரிவிக்கிறான்.

Dr. S. Justin Prabakaran

(வளரும்) இடிமுழக்கம் ஆசிரியர்.

---

# ஜீவநதி சுவிசேஷ ஸ்தாபனம்

## 32 லொயிட்ஸ் அவனியூ

## மட்டக்களப்பு

இலவச வேத பாடங்கள் ★ ஒலி நாடாக்கள்

ஜெபதேவைகள் ★ கிறிஸ்தவ பாடல்கள் செய்திகள் அடங்கிய ஒலி நாடாக்கள்.

சுவிசேஷ ஓசை என்னும் வானொலி நிகழ்ச்சியைச் சனிக்கிழமைகளில் மாலை 5 மணிக்கு சிற்றலை 41 அல்லது 25 மீற்ரரில் கேட்டு மகிழலாம்.

மேற் கூறப்பட்ட வானொலி நிகழ்ச்சி மூலம் நீங்கள் பெற்ற ஆசீர்வாதங்களைச் சுவிசேஷ ஸ்தாபனத்துக்குத் தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

---

எமது பணிக்குப் பரிபூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும் தந்து, சிறந்த முறையில் இந்த இதழையும் அச்சிட்டு உதவிய 'ஜெஸ்கொம்' நிறுவனத்தினருக்கு எமது இதய பூர்வமான நன்றி. அங்கு சேவை செய்யும் ஒவ்வொருவரையும் நமது ஆண்டவர் ஆசீர்வாதங்களால் நிறையச் செய்யவேண்டுமென்று, எமது ஜெபங்களில் அவர்களை நினைவு கூருவோம்.

நன்றி — ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CHANTING OF PRAISES OF GOD AS PER STHOTHRA NAMAVALI

There, are 1008 sthothra namavali chantings for God. Here, only a few are given.

*Ohm Sri Bhrammaputhraya namaha*
The one who is called the son of God.

*Ohm Shri Umathaya namaha*
The one who is born of the Holy spirit.

*Ohm Shri Kannisudhaya namaha*
The one who is born of a virgin.

*Ohm Shri Vrukhsha sula Aruthaya namaha*
The one who is sacrificed on on a tri shut like tree.

*Ohm Shri Panchakaya namaha*
The one who has five wounds on the body.

*Ohm Shri Sibjlishtaya namaha*
The one who gave his flesh willingly.

*Ohm Shri Mrithyum jaya hamaha*
The one who has victory over death.

*Ohm Shri Ajah mukha namaha*
The one who is a goat.

*Ohm Shri Mahadevaya namaha*
The one who is Lord of Lords.

Any one who knows the meaning of these chantings will understand who is the God that is praised by him. Is he not the Christ? (*John 4 : 29*)

Jesus, incarnated in the Asian soil, can speak directly to the East, without a detour via Europe. All ernest disciples of Christ in this land concur on this point, rather belatedly and are set on doing early rectification. Christians in India have not sufficiently discerned the difference between life in Christ as Indians and a pseudowestern culture. Most of the teachings, doctrines and practices of the Hindus are based upon the Old and New Testaments. To say it correctly, Christ is robed in Hinduism. A careful study of the Bible and the Indian Vedic scriptures will convince any Hindu. The aims of Christianity is to abide in Christ and not to convert any one.

Extract from the book 'IS CHRISTIANITY A NECESSITY!'
by Sadhu Chelppan.

THE HOPE
80/2 Angle Road,
Batticaloa.
Sri Lanka.

7

நம்பிக்கை
80/2 நல்லையா வீதி,
மட்டக்களப்பு.
இலங்கை.

இப்பிரசுரம் மட்டக்களப்பு 80/2 நல்லையா வீதியில் வதியும்
V. ஆறுமுகம் சாமுவேல் தர்மராஜா அவர்களால்,
மட்டக்களப்பு, 60, மத்திய வீதியிலுள்ள ஜெஸ்கொம் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org